1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

சத்திய வேத பாதகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 1-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 34-ம் இலக்கம்

சுதேச வாக்தமானம்

காலநிலை

மப்புமந்தாரம் காணப்படினும் மழையில்லை. கடுங்குளிர்காற்று இரவுபகல ஓயாது புயலைப்போன்று வீசிக்கொண்டிருக்கிறது. அதனால் இன்புளுவென்சாபோலும் குளிர்சுரம்ஒன்று தலைகாட்டி மக்களை வாட்டிவருத்துகின்றது.

ஞாபகார்த்த முத்திரைகள்

பௌத்தர்களின் சம்புத்த ஜயந்தி விழாவையும், இலங்கையிலே விஜயன் வந்திறங்கியதையும் ஞாபகப்படுத்துமுகமாக 1956-ம்ஆண்டு விசாகப்பெருநாளன்று அரசாங்கம் மூன்றுசத, நாலுசத, பத்துச்சத, பதினைந்துசத தபால்முத்திரைகளைப் பாவனைக்குவிடவிருக்கின்றது. இவற்றிலே பத்துச்சதமுத்திரைக்கும், நான்குசதமுத்திரைக்கும் அவற்றில்குறிக்கப்பட்டுள்ள விலையிலும் முறையே ஐந்துசதமும், இரண்டுசதமும சம்புத்தஜயந்தி நிதிக்கென மேலதிகமாய் அறவிடப்படும். ஆனால், இவ்விதம் இருமுத்திரைகளையும்வாங்கிச் சம்புத்தநிதிக்கு எல்லாரும் பணஉதவி செய்யவேண்டுமென்ற கட்டாயமில்லை. அந்தநிதிக்குப் பண உதவியளிக்க விரும்பாதவர்களுக்கென்று வழமையான பத்துச்சத, நான்குசதமுத்திரைகள் முன்போலப் பாவனையிலிருக்கும்.

பனைவெல்லத் தொழிற்சாலை

மன்னார்ப்பகுதியிலே முதன்முதலாகத் தலைமன்னாரில் அமைக்கப்பட்ட பனைவெல்லத் தொழிற் சாலையைத் தென்னிந்திய பனம்பொருள்உற்பத்தி நிபுணரான திரு. டி. காசி அவர்கள் சென்ற 26-ந் திகதி வெள்ளிக்கிழமை திறந்துவைத்தனர். 50ஏக்கர் விஸ்தீரணமாக முடிக்குரிய பனங்காணியிலே அரசாங்கத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்டுள்ள இப்பனைவெல்லத் தொழிற்சாலையில் அவரே முதன்முறையாகப் பனைவெல்லம் செய்து காண்பித்தார். அத்தருணம் மன்னார் அரசாங்க ஏசன்றர் மற்றும் பிரமுகர்களுடன் சமூகமளித்துத் திரு. காசியவர்களின் சேவையைப் பாராட்டி, அத்தொழிற்சாலையின் அபிவிர்த்திக்குப் போதிய உதவிசெய்வதாக வாக்களித்தார். புதியயந்திரம்ஒன்று வந்துசேர்ந்ததும் இந்தத்தொழிற்சாலையில் தினசரி ஒருதொன் பனைவெல்லம் தயாரிக்கமுடியுமென்றும், அத்துடன் அமெரிக்காவுக்குப் பனைஈர்க்கில் ஏற்றுமதிசெய்யப்படுமென்றும், தும்புக்கைத்தொழிலும் தொடக்கப்படுமென்றும் திரு. காசியவர்கள் அவ்வேளைபேசியபோது தெரிவித்துநின்றார்.

கல்லூரி ஆரம்பம்

மத்திய கோடைகால விடுமுறை முடிந்து சம்பத்திரிசியார்கல்லூரி இம்மாதம் 6-ந் திகதியாகிய வருகிற செவ்வாய்க்கிழமை வழமைபோல ஆரம்பமாகும்.

பண்ணைத்துறைத் தெரு

பண்ணைத்துறையின் தென்புறமாகக் கடலினூடாகச் செல்லுந்தெரு போதியவிசாலமின்மையால் கார், பஸ் போக்குவரத்துக்கும், பாதசாரிகள் நடந்துசெல்வதற்கும் பெரிதும்நெருக்கடியை உண்டுபண்ணுகிறதென்று பொதுமக்கள் முறையீடு செய்துகொண்டதன் பேரிலே தற்போது அந்தத்தெரு விசாலமாக்கப்பட்டு வருகிறது.

இரணைமடுவும் சிறுபோகமும்

இம்முறை சிறுபோகத்திற்கு இரணைமடுக்குளத்தில் ஏராளமான தண்ணீர்இருந்தமையால் கிளிநொச்சி, பரந்தன், வட்டக்கச்சி, முரசுமோட்டை, உருத்திரபுரம் ஆதியாம்கிராமங்களில் நன்றாக நெல்விளைந்திருக்கிறது. பலவிடங்களிலே அருவிவெட்டுத் தொடங்கி மும்முரமாக நடைபெற்று வருகிறது. சூடுஅடிப்பதும் இடையிடையே தொடங்கிவிட்டது. சூடுஅடிக்கும்வேலைமுழுவதும் யந்திரத்தாலேயே நடைபெறுகின்றது. மாடுகளைக்கொண்டு சூடுமிதிக்கும்வழக்கம் அப்பகுதிகளில் ஆண்டுதோறும் அருகிக்கொண்டே வருகிறது. யந்திரங்கொண்டு சூடுஅடிப்பதினால் காலச்சுருக்கமும், செலவுச்சுருக்கமும் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது.

பழைய கடதாசி நோட்டுகள்

1950-ம்ஆண்டு மார்கழிமாதம் 31-ந் திகதிக்கு முற்பட்ட திகதிகளையும், நாணயஅதிகாரிகளின் கையொப்பப் பிரதிகளையுங்கொண்ட பத்துரூபா நோட்டுகளும், அதற்குக்குறைந்த 50 சத, 25 சத, 10 சதநோட்டுகள் உட்பட 10 ரூபாவுக்குட்பட்ட எல்லாக்கடுதாசி நோட்டுகளும் அடுத்துநிகழும் 1956-ம்ஆண்டுஆவணிமாதம் 31-ந் திகதிக்குப்பின் செல்லமாட்டா வென்று அரசாங்க கெசற்றிலே பிரசித்தஞ்செய்யப் பட்டிருக்கிறது. அவ்வாறு செல்லாமற்போகும் நோட்டுகளைப்பற்றிய விபரங்கள்வருமாறு: தலதாமாளிகைப்படமுள்ள 10ரூபாநோட்டு, துபரம டகேநபாப் படமுள்ள 5 ரூபாநோட்டு, சிகிரியாமலைப் படமுள்ள 2 ரூபாநோட்டு, யானைத்தலைப்படமுள்ள 1ரூபாநோட்டு, ஆறாவது ஜோர்ஜ்மன்னரின் உருவப்படமுள்ள 50 சத, 25, சத, 10 சத நோட்டுகள்என்பனவே. இந்தக்கடுதாசி நோட்டுகளை வைத்திருப்பவர்கள் 1956-ம் ஆண்டு ஆவணி 31-ந்திகதிக்கு முன் எல்லாவங்கிகளிலும், கச்சேரிகளிலும், கொழும்புத் திறைசேரியிலும், இலங்கைப் பிரதமவங்கியிலும் மாற்றிக்கொள்ளவேண்டும்.

மிகப்பெரிய எரியூட்டுவிழா

கொழும்புரேகிலே தபாற்கந்தோர் விலைமதிப்புக் காரியாலயத்திலே எவராலும் தம்முடையனவென்று உரிமை பாராட்டப் படாதனவாய்க் கம்யூனிஸ்தபுத்தகங்கள், சஞ்சிகைகளைக் கொண்ட 2,000 கட்டுகள் இருந்து வருகின்றன. தேடுவாரற்றுக்கிடக்கும் இந்தப் புத்தக-சஞ்சிகைக் கட்டுகள் ரேகுத்தலைவரது கட்டளையின்பேரிலே சுட்டெரிக்கப்படவிருக்கின்றன. அங்ஙனம் அவைகள் எரிக்கப்படும்போது, ரேகுப்பகுதியிலே கம்யூனிஸ்தபிரசுரங்களை எரியூட்டும் பெரியகளியாட்ட தீபவிழாஒன்று நடந்தேறும்.

கல்விச்செலவும் தீச்செயலும்

தங்காலையைச்சேர்ந்த ரெட்டோல் பிட்டி அரசாங்கபாடசாலையின் புதிய கட்டடத்தை வித்தியாதிபதி திரு. டி. டி. ஜயசூரியஅவர்கள் சென்ற திங்கட்கிழமை திறந்துவைத்துப் பேசிய போது: கல்விக்கென அரசாங்கம் வருடம்ஒன்றுக்குப் 16 கோடிரூபாவுக்கு மேல் செலவிடுகிறது; ஆனால், வருடந்தோறும் இரண்டுநாளைக்கு ஒருதரம் ஒருவன் தூக்கிலிடப்படுகின்றான்; இவ்வாறு தூக்கிலிடப்படுகிறவர்கள் இவ்வளவுபெருந்தொகையாக அரசாங்கம் பணஞ்செலவிடும் பாடசாலைகளில் படித்தவர்களேஎனக் கூறலாயினர்.

தமிழ்இலக்கியக் கழகப்பரிசு ரூபாஆயிரம் பெற்றார்

இலங்கையராகிய திரு. பண்டிதர் ஆசிநாதன், தூத்துக்குடித் தமிழ்இலக்கியக் கழகத்தின் ஆராய்ச்சிப் போட்டியில் ஆயிரம்ரூபாப் பரிசினைப் பெற்றுள்ளார். இப்பரிசினைப் பெறுவதற்கு இவர் எழுதிய நூல்— "நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசரும், அவர் தமிழ்த்தொண்டும்." விரைவில் இந்நூல் அச்சிடப்பெறும்.

ஆசிரியரின் அறிவுரை

கொடிகாமத்தைச்சேர்ந்த வெள்ளம்போக்கட்டிச் சனசமூகநிலைய ஆரம்பகூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்தேறியது. அதிலே மீசாலைச் சனசமூகநிலையத்தின் முன்னை நாள்தலைவரான ஆசிரியர் ஆர். சி. சிவசுப்பிரமணியம் அவர்கள் கூறிய அறிவுரை வருமாறு: தமிழ்மக்கள் தாங்கள் கஷ்டப்பட்டு உழைத்ததைக் கலியாணக் கொண்டாட்டங்கள், திருவிழாக்கள், மரணச்சடங்குகளிலே வீணசெலவு செய்துவிடுகிறார்கள். உதாரணமாக, கோவில் திருவிழாக்களை எடுத்துக்கொண்டால், யாருடையதிருவிழா திறமென்று மற்றவர்கள் கதைக்கவேண்டும் என்பதற்காகப் போட்டாபோட்டியாகப் பணத்தைச் செலவுசெய்கிறார்கள். அத்துடன் ஆடம்பரவாழ்க்கையிலே அதிகமாக ஈடுபடுங்குணமும் தமிழ்மக்களிடம் காணப்படுகிறது. இவைகள் அறவே நீக்கப்படவேண்டும். இந்தப் பழக்க வழக்கம் ஏழைமக்களையும் கடனாளிகளாக்கிவிடுகிறது என்பதே.

ஆஸ்திறேலிய மா

ஆஸ்திறேலியமாவின் கையிருப்புக் குறைந்துவிட்டதென்று சமீபத்தில் செய்திபரக்கலாயிற்று. உணவுக்கம்மிஷனர் திரு. எம். எல். டி. கஸ்பேர்ஸ் அவர்கள் அதைமறுத்து, கடந்த இருவாரங்களாக ஆஸ்திறேலியமா உதவப் படாதகாரணம் கையிருப்புக் குறைவல்லவென்றும், பலதினங்களாகக் கையிருப்பிலே இருந்துவருகின்ற பிரான்சியமாவைக் கொடுத்துமுடிப்பதற்காகவே ஆஸ்திறேலியமா வழங்குவது நிறுத்தப்பட்டதென்றும் தெரிவித்திருக்கின்றார்.

நடுப்போக்கச் சென்றவர்

பையகாலையிலே சென்றஞாயிற்றுக்கிழமை ஹென்றிக்சில்வா, எதின்சில்வா எனும்இருவர் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தபோது, மைக்கேல் பெறேறாஎன்பவர் அவர்கள்இருவரையும் சமாதானப்படுத்த முயன்றவிடத்து ஹென்றிக்சில்வா அவரைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டனன். குத்துண்டு இறந்த மைக்கேல் பெறேறா ஐந்துபிள்ளைகளுக்குத் தந்தையாவர். குற்றியவன் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்துவருகின்றான்.

வெங்காயத்தின்உத்தரவாதவிலை

வெங்காயத்தின் உத்தரவாத விலைத்திட்டத்தை இன்னும் ஒருவருடத்துக்கு — அதாவது அடுத்துநிகழும் 1956-ம் ஆண்டு முடிகிறவரையிலே நீடிக்கச்செய்ய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. ஆனால், வெங்காயவிலையை றாத்தலுக்கு ஐந்துசதவீதம் குறைத்துவிட்டிருக்கிறது. அதனால் வெங்காயச்செய்கை வெகுவாகப்பாதிக்கப்படுமென்ற அச்சம்எழுந்திருக்கிறது. ஆகையால், அரசாங்கம் வெங்காய விலையைப்பற்றித் திரும்பவும்ஆலோசனைசெய்து தற்போதுள்ள விலையையே மீண்டும்கொடுக்க வேண்டுமென்ற கேள்வி பிறந்திருக்கிறது

லொறி மரத்துடன் மோதியது

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஞாயிற்றுக்கிழமை வவுனியாவைநோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று கனகராயன்குளத்திலே பாதையைவிட்டுவிலகி ஓர்மரத்துடன்மோதிய காரணமாக லொறியின் சாரதியான செபஸ்தியாம்பிள்ளை விபத்துக்குள்ளாய் அந்தஇடத்திலேயே மரணமாயினர். அந்தலொறியில் பிரயாணஞ்செய்த மரியாம்பிள்ளை, மனுவேல், இருதயதாசன், இராசரத்தினம் எனும் நால்வரும் சிறுகாயங்களுடன் தப்பிக்கொண்டனர். வவுனியாநீதிபதி விபத்து நிகழ்ந்த இடத்திற்குச்சென்று விசாரணை நடத்தினார்.

இந்திய வெங்காயக் கூடைகள்

யாழ்ப்பாணப்பகுதியிலே வெங்காய விளைவு வருடந்தோறும் அதிகரித்துக் கொண்டு வருவதால் விளைந்தவெங்காயத்தைத் தகுந்தமுறையில் சேமித்து வைத்து விற்பதற்குக் கூடைகள் அவசியம் வேண்டும். இக்கூடைகள்இலங்கையில் போதிய அளவாய்க்கிடைப்பதில்லை. அதனால் வடபகுதிக் கமப்பொருள் உற்பத்தியாளர் ஐக்கியசமாசம் இந்தியாவிலே குலசேகரன்பட்டினத்தி லிருந்து வெங்காயக்கூடைகளைத் தருவிக்க ஒழுங்குசெய்திருக்கின்றது. இவைகள் ஊர்காவற்றுறையில் நேரடியாக இறக்குமதிசெய்யப்படுமெனத் தெரியவருகிறது.

வாழ்க்கைச்செலவுப் புள்ளி

இலங்கையிலே சென்றஆவணிமாதத்தில் வாழ்க்கைச்செலவுப் புள்ளித் தொகை 99·9 ஆகக் குறைந்திருக்கின்றது. அங்ஙனம் குறைவதற்குக்காரணம் வெங்காயம், தேசிக்காய், மரக்கறிவகை, உருளைக்கிழங்கு ஆதியவற்றின் விலைகள் குறைந்தமையேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவஅழைத்தலை தெளிவாய்க்காட்டும்

தெரியலான அறிகுறிகள்

(தமிழாக்கம்: ஆசிரியர், எல்.. பாக்கியநாதர்)

தேவஅழைத்தலிலே அக்கறை உள்ளவர்களுக்கெல்லாம் உபயோகப்படுமாறு அதற்குரிய அறிகுறிகள் சிலவற்றை ஈண்டுகுறிப்பிடுவோம். இவற்றை ஆராய்வாய் வாசித்து, ஆழ்ந்துயோசித்தல் நன்று. வாசிக்கும்போது எந்த எந்த அறிகுறி தன்னிடம் உண்டென்று ஒருவர்உணருகிறாரோ, அந்தஅந்த அறிகுறியைக் குறித்துவைத்து, அவர் தனது ஆத்துமகுருவுடன் ஆலோசித்தல்வேண்டும்.

தேவஅழைத்தலைப் பொறுத்தவரையிலே இங்குகுறிப்பிடப்படும் அறிகுறிகள் முடிபானவைஎன்று திட்டமாகக் கூறுதல்முடியாது. எனினும், அவைகள் தேவனின் அருட்பார்வைக்கு அடையாளம்என்று தீர்க்கமாகக் கூறலாம். இந்த அறிகுறிகள் எவரிடம் உண்டோ, அவரிடம் தேவன் எதையோ எதிர்பார்க்கிறார் என்பது நிச்சயம். துறவற அல்லது குருத்துவ அந்தஸ்தை ஒருவர் தெரிந்துகொள்ளுமுன் அந்த அந்தஸ்தைப்பற்றி அவர்நன்கு விளங்கிக்கொள்வதும், அதற்குத்தகுதியானவிதமாய்த் தன்னை ஆயத்தப்படுத்துவதும் நன்று.

அந்த அறிகுறிகளாவன :

1. தேவன் தமது ஊழியத்திற்குத் தன்னை அழைக்கிறார் என்றஉணர்ச்சியும், அவ்வூழியத்தின்மேல் ஆசையும் உண்டாகும். இந்தஆசை சாதாரணமாகத் தேவநற்கருணைபெற்றபின்னும், ஞானஒடுக்கத்தின்போதும், இருதயத்தில் சாந்திஏற்பட்டிருக்கும் தருணத்திலும் உண்டாகும்.

2. மறைந்துவாழ்வதிலும், கிறீஸ்துநாதருக்காகக் கிறீஸ்துநாதரிலேயே வாழ்வதிலும் ஆசைஏற்படும். செபத்திலும், உள்ளாந்தர விருத்தியிலும் கவர்ச்சி உண்டாகும். கிறீஸ்துநாதரையே சதா தியானித்துக்கொண்டு சீவிப்பதற்கு உலகபராக்கும், உலக ஆடம்பரமும் இடையூறாய்த் தோன்றும்.

3. உலகம், ஆத்துமத்தின் ஆவலை—அதாவது கிறீஸ்துநாதருடன் ஒன்றிப்பதை—பூர்த்திசெய்ய ஆற்றல்அற்றதாய், வெறுமையானதாய்க் காணப்படும். விவாகத்தின்மீது வேண்டாமை ஏற்படும். இந்தஉணர்ச்சிகள் உலக ஆடம்பரங்களின் மத்தியிலேயே உண்டாகவுங்கூடும்.

4. பாவத்தின்மேல் பயம்உண்டாகும். பாவச்சமயங்கள் நிறைந்த இப்பூவுலக வாழ்விலே விலகிவாழ விருப்புண்டாகும்.

5. ஆத்துமவிடாய்கொண்டு, ஆத்துமங்களின் இரட்சணியத்திற்காகச் சிலுவையில் சீவனைவிட்ட கிறீஸ்துநாதரின் தாகத்தைத்தீர்க்க ஆர்வம்உண்டாகும். அநேகர் மனந்திரும்பும்படி அடிக்கடி அதிகமாகச் செபிக்கவும், அவர்களுக்காகப் பரித்தியாகஞ்செய்யவும், வேதபோதகநாடுகளுக்குச் சென்று கிறீஸ்துநாதரின் மந்தையை விருத்திசெய்யவும் ஆவல்உண்டாகும். சொந்தநாட்டில்உள்ள கத்தோலிக்கசேவையில் ஈடுபட்டிருந்தும், அதில் ஆற்றும் அப்போஸ்தலிக்கதொண்டு மனத்திருப்தியை உண்டாக்காமையால் மேலும் மேலும் சுவிசேஷத்தொண்டு செய்ய மனம்ஏவும்.

6. மிகவும்அருமையான ஒருஆளையோ அல்லது நாட்டையோ மனந்திருப்புவதற்காகத் தன்வாழ்நாள் முழுதுஞ் செலவிட விருப்புண்டாகும்.

7. விரத்தத்துவத்தில்—கன்னிமையில் கவர்ச்சிஉண்டாகும்.

8. பரிசுத்தமாய் வாழ விருப்புண்டாகும்.

9. சந்நியாச சீவியத்தின் அல்லது குருத்துவஅந்தஸ்தின் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் அதற்குரிய சன்மானத்தையும்பெறத் தூண்டுதல் ஏற்படும்.

10. தான் சந்நியாச அல்லது குருத்துவ அந்தஸ்துக்கு அழைக்கப்படக் கூடாதுஎன்று ஒருவர் மன்றாடும்போதும், அல்லது தேவன் தன்னைஅழைப்பாரோஎன்று பயப்படும்போதும், அப்படியானஎண்ணத்தை ஒருவர்தன்னிடமிருந்து முற்றாய்அகற்ற முடியாதிருப்பதும் தேவஅழைத்தலுக்கு ஓர்அறிகுறியேயாகும். ஆதலின் தேவஅழைத்தலுக்கு இயற்கையானசார்பு அவசியமில்லை.

அழைத்தலை இழந்துபோவது ஏன் ?

உண்மையான தேவ அழைத்தலைச் சிலர் ஏன் இழந்துவிடுகின்றனர் என்பதைச் சிறிதுபார்ப்போம்.

1. சிலர் தாமே சிந்தித்துத் தாமே தீர்மானிக்கின்றனர்.

2. சிலர் அளவுக்குமிஞ்சிய சந்தேகிகளாய் இருக்கின்றனர்.

3. அப்படியான ஒருகொடையைத் தேவன் தமக்குக்கொடுப்பதற்கு அவர்மட்டில் தாம்போதியஅளவு தாராளமாக இருக்கவில்லைஎன்று சிலர் எண்ணுகின்றனர்.

4. வேறு ஆட்களுக்கோ, வேறு விஷயத்திற்கோ பயப்படுகின்றனர்.

5. உலகமரியாதையும், சுயநலமும் தடைசெய்தல்.

6. தமது சொந்தநிலைபரத்தில் தாம் அதிக சந்துஷ்டியுடன் வாழ்வதால், தமதுசௌகரியங்களைஎல்லாம் வெறுத்துவிடும்படி அன்புள்ளதேவன் தம்மை அழைக்க மாட்டார்என்று சிலர்எண்ணுகின்றனர்.

தேவன் இளைஞரின் இதயங்களில் அநேகம்முறை தட்டுகிறார்; தட்டி அவர்களின்பதிலை எதிர்பார்க்கிறார். சில தருணங்களில் அவருக்குப் பதிலே கிடைப்பதில்லை. கிடைத்தாலும் ஏமாற்றமான 'இல்லை' என்ற பதிலே கிடைக்கிறது. அப்போதுஅவர் ஏமாற்றத்துடன் முகத்தைத் திருப்பிக்கொள்ளுகின்றார். ஒருமுறை ஏமாற்றிய இதயத்தை ஒருவேளை அவர் ஒருபோதுமே திரும்பவும் தட்டாமல் விட்டுவிடுவார். அப்போது அந்தஇதயம் தன் தேவஅழைத்தலை இழந்துவிடும். அந்த இதயத்துடன் சேர்ந்து தமது இரட்சணியத்தையே இழந்துவிடும் ஆத்துமங்கள் எத்தனை ?

உன்னைக்கூப்பிடுவது தேவனே; உன்னைஅழைப்பது அவரே; அவருக்குச் செவிகொடுக்க வேண்டியது நீ; அவருக்கு 'ஆம்' என்று உத்தாரஞ் சொல்லவேண்டியது நீயே.

● பாப்பரசரின் சுகத்தையிட்டுத் திருப்தியடைந்துள்ள அவரது வைத்தியரான பேராசிரியர் கலீஸி - லிஸி அவர்கள் விடுமுறையிற்செல்லத் தீர்மானித்திருக்கின்றார். பரிசுத்தபிதா சென்றமார்கழிமாதம் மூர்ச்சையடைந்தபின்னர் இவரின் முதலாவதுவிடுமுறை இதுவாகும். "தமது வயதிற்கேற்க அதிகஞ்சிறந்த சுக நிலையில் இருந்துவருகிறார்" பாப்பரசரென அவர் கூறுகின்றார்.

● இங்கிலாந்திலே லிவர்ப்பூல்நகரில் கிறீஸ்துஇராசாபேரால் கட்டியெழுப்பப்பெற்று இடையிலே யுத்தங்காரணமாக நிறுத்தப்பட்டிருந்த புதிய ஆசனக்கோவிலின் கட்டுவேலை சமீபத்திலே திரும்பவும்ஆரம்பிக்கப்பட விருக்கிறது. இதன்பரிமாணம் குறைக்கப்பட்டபோதிலும் இதைக்கட்டிமுடிக்க ஏற்படும் செலவுமதிப்பு 5கோடியே 50லட்சம் ரூபாவாகும்.

புதியகுரவரின் முதற்பூசை

பெரியமாதகற்பதிவாசரும், சம்பத்திரிசியார்கல்லூரி ஆசிரியராகவிருந்து சமீபத்தில்இளைப்பாறியவருமான திரு. எஸ்.பிரான்சீஸ்—திருமதி அன்னம்மாதம்பதிகளின் சிரேஷ்ட புத்திரர் வண. எவ். ஜே. நவரத்தினம் சுவாமியவர்கள் கொழும்பிலே குருப்பட்டம் பெற்றபின் தமதுதாய்நாடாகிய யாழ்ப்பாணத்திலே தமது முதற் பூசையை நிறைவேற்றுதற்காகச் சென்ற 27-8-55 சனிக்கிழமை காலை யாழ்ப்பாண மேற்றிராசனமாளிகை வந்து சேரலாயினர். பின்னர் அங்கிருந்தும் அவர் தமது பெற்றார், சகோதரர், இனசனர், அன்பர்கள் சமேதராய் வாத்தியவரிசைகளுடன் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பெற்றனர். அங்கே பெருந்திரளான மக்கள் தேங்கியிருக்க, நறுமணங்கமழும் அழகியமலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த பலிபீடத்திலே வண. எம்.. எஸ். நல்லையா சுவாமியவர்களைத் துணையாகக்கொண்டு, தமது இருசகோதரர்களான திரு. எவ். சி. வேதநாயகமும், திரு. எவ். ஏ. இராசநாயகமும் உதவி புரியத் திவ்வியபூசை நிறைவேற்றினார். பூசையின்பின்னர் குரவர்அவர்களின் அபிஷேக திருக்கரங்களை எல்லோரும் முத்தமிட்டு ஆசிபெற்றுமகிழ்ந்தார்கள். அதன்மேல் புதியகுரவர் அன்பர்கள் பலராலும் புஷ்பாரங்கள் சூட்டப்பெற்றுப் பலகுருமார் புடைசூழ வாத்தியவரிசைகளுடன் அழகுறச்சிங்காரிக்கப்பட்டிருந்த சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்திற்குப் பெரியஊர்வலமாக அழைத்துச் செல்லப்பெற்றனர். அங்கே அதிவண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியவர்கள் தலைமையிலே அவரின் வரவேற்பு உரையோடு வரவேற்புஉபசாரம் ஆரம்பமாயிற்று. பலாலி, அரசினர் ஆசிரியகல்லூரி விரிவுரையாளர் திரு. பி. எம். வேதநாயகம்அவர்களும், பரிமேலர் எஸ். அருளானந்தம் அவர்களும் குருத்துவத்தின் மகத்துவத்தை எடுத்துக்காட்டிப் புதியகுரவரினதும், அவர்பெற்றோரினதும் பல்வேறு விசேஷயங்களையும் விதந்துபாராட்டிச் சோபனங்கூறிநின்றார்கள். புதியகுரவர் ஆரம்பக்கல்வி பயின்ற சென்சாள்ஸ் கழகமாணவிகள் வரவேற்புக்கீதங்கள் இனிமையாகப் படித்தார்கள். நெடுந்தீவுக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் அவர்கள் சித்திரவேலைப்பாடமைந்த உபசாரப் பத்திரம்ஒன்று படித்துக்கொடுத்தனர். பெற்றார், இனசனர், மற்றும்அன்பர்களால் விலைபெற்ற அநேக அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. ஈற்றில் புதியகுரவர் எழுந்து தமது தாய்தந்தையரின்வளர்ப்பாலும், வண. எஸ். ஜி. இல்லறி சுவாமியவர்களின் இடையறாத நல்லேவுதலாலுமே தாம் இப்பெரும் பதவியை அடையமுடிந்ததெனக்கூறி, பெற்றோர் தங்கள்பிள்ளைகளைத் தேவசேவைக்கு ஏற்றவிதமாய் வளர்த்துக் குடும்பத்தில் ஒருவரையாவது தேவஊழியத்திற்கு அர்ப்பணஞ் செய்ய வேண்டுமென்றுகேட்டுத் தமதுதிருக்கரஆசீர் அருளலாயினர். பின்னர் சமுகமாயிருந்தாருக்கெல்லாம் ஞாபகார்த்த சின்னங்கள் வழங்கப்பட்டதும் குரவர்அவர்கள் தமதுபெற்றார், சகோதரர்களுடன் அவர்களது இல்லத்துக்கு ஏகலாயினர். சுபம்!

— நிருபர்

● சமீபத்திலே கல்கத்தாவில் காலியாகவிருந்த 25பொலிஸ்காரரின் ஸ்தானங்களுக்கு நாலாயிரம்பேர் மனுப்பண்ணியிருந்தார்கள். இவர்கள் யாவரும் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் அரங்கேறியவர்களாய், அல்லது பட்டதாரிகளாய் இருந்தார்கள். அவ்வாறே இருபதுரூபா உபகாரச்சம்பளங்கிடைக்கும் கமப்பயிற்சிக் கல்லூரியில் காலியாயிருந்த 20ஸ்தானங்களுக்கு பி. ஏ. பட்டதாரிகளும், அப்புக்காத்துமார்களுமான பலர் மனுப்பண்ணிக்கொண்டனராம்.

பாண்டியந் தாழ்வும் புதிய குரவரும்

சென்ற சனிவாரம் பாண்டியந்தாழ்வின் பெருமைவாய்ந்த சரித்திரத்திலே சிறப்பிடம் வகிக்கும் அருமையான நிகழ்ச்சியொன்று நடைபெறலாயிற்று. அதாவது, புதியகுரவர் வண. ஜே. பிரான்சிஸ் சேவியர் சுவாமியவர்கள் தமதுகுருத்துவ அபிஷேகத்தின் பின் அன்றுதினம்யாழ்ப்பாணத்திலேமுதன் முதலாக எம்பதியில்விளங்கும் சந்தானாள்ஆலயத்திலே முதற்பூசை நிறைவேற்றியமையேயாகும். இதற்கென ஆலயமும், அதன்முன்றிலும் அழகுறச் சிங்காரிக்கப்பட்டுத் தேசோமயமானகாட்சி அளித்துநின்றன. அதிகாலை ஆலயமணிகள் ஆர்ப்பரிக்க, யாழ்நகரின் பல்வேறுபகுதிகளிலுமிருந்து புதியகுரவரின் உறவினரும், அன்பர்களும் வந்துசரிந்தவண்ணமிருந்தனர். பின்னர்எல்லோரும் சுண்டிக்குழிச் சந்தியையடைந்து புதியகுரவரின் வருகையை எதிர்பார்த்துநிற்க, அவரும்மோட்டர்ரதாரூடராய் வந்திறங்க, வண. பி. சூசைப்பிள்ளைச் சுவாமியவர்கள் உள்ளன்புததும்ப அவரை இனிதேவரவேற்க, மக்கள் மலர்மாலைசூட்டிக் கரகோஷம் செய்தார்கள். அதன்மேல் புதியகுரவர் பலகுருமார் புடைசூழ வாத்தியவரிசைகளுடன் ஊர்வலமாக ஆலயத்துக்கு அழைத்துச்செல்லப்பெற்றனர். அவர்சென்ற வழிநீளம் அவரின்உறவினரும், சைவநண்பர்களும், மற்றும்அன்பர்களும் மலர்மாலைகள் சூட்டியும், மலர்கள்தூவியும் தங்கள்மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

ஆலயத்தையடைந்ததும் புதியகுரவர், வண. சூசைப்பிள்ளைசுவாமியவர்களும், வண. ஈ. பொமிக்கோசுவாமியவர்களும் துணைபுரியத் திவ்வியபூசை நிறைவேற்றினார். பூசையின்போது வண. பி. வில்லியம்யேசுதாசன்சுவாமியவர்கள் குருத்துவத்தின்மகிமையைப் பற்றி எல்லோரும் ஞானமனோகரமுற்றுப் பரவசங்கொள்ளும்படியாக இனியதோர் பிரசங்கம்செய்தனர். பூசைமுடிவில் "தெதேயும்" என்ற தேவதோத்திரகீதம் பாடப்படலாயிற்று.

அன்றுபிற்பகல் 4-30 மணியளவில் குடாநாட்டின் பலபாகங்களிலுமிருந்து திரளாகவந்துகுழுமிய குருமார், உறவினர், சிநேகிதர் ஆலயத்திலே சமுகமாகப் புதியகுரவர் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளினார். பின்னர் பாண்டியந்தாழ்வு மக்களால் அவருக்குச் சிறந்தவரவேற்பொன்று அளிக்கப்பட்டது. ஆலயமுன்றிலிலே அமைக்கப்பட்டிருந்த அழகியபந்தலில் மின்னொளிவீசும் மின்சாரதீபங்கள் துலங்க, ஒலிபெருக்கி இசைபெருக்க, புதியகுரவர் வரவேற்கப்பெற்றனர். ஏனையகுரவர்கள்புடைசூழ நடுநாயகமாக எழுந்தருளியிருந்த குரவர்அவர்களை மக்கள் மலர்மாலைசூட்டி மாண்புடன்வரவேற்றனர். சிறுவர்சிறுமியர் தீஞ்சுவைததும்பும் இனிய வரவேற்புக் கீதங்கள்படித்து வாழ்த்தினர். பின்பு வந்தனோபசாரப் பத்திரம்ஒன்றுபடித்து வழங்கப்பட்டதும் குருத்துவத்தின் மகத்துவத்தைப்பற்றியும், குரவர்அவர்களின் முன்மாதிரியான இளமை வாழ்க்கைபற்றியும், வாலிபத்தின் தியாகத்தைப்பற்றியும் முறையே ஆசிரியர் பி. அருளானந்தம் அவர்களும், ஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்களும், பரிமேலர் எஸ். அருளானந்தம் அவர்களும், ஆசிரியர் கே. சச்சிதானந்தம்அவர்களும், ஆசிரியர் அல்போன்ஸ்அவர்களும் சொற்பொழிவாற்றிநின்றார்கள். ஈற்றில் புதியகுரவரின் இனியபதிலுடனும், தோட்டோபசரணையுடனும் வரவேற்புநிகழ்ச்சி முடிவெய்தியது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க சமாச்சாரம்

பாப்பரசரின் சகோதரி

பரிசுத்தபாப்பரசரின் மூத்த சகோதரியான 83 வயதுடைய கியுசெப்பினா பச்செல்லி மென்காறினிகோமகள் ரோமைநகருக்குச்சமீபமான தமது இல்லத்திலே சென்ற ஆவணிமாதம் 7-ந் திகதி ஞாயிறன்று காலஞ்செல்லலாயினார். இவர் கடந்த இருபது வருடகாலமாகப் பாரிசவாதம் கண்டிருந்தார். இவரின் நாயகரான எத்தோறே மென்காறினிகோமகன் இற்றைக்கு மூன்று வருடங்களின் முன் காலஞ்சென்றார். பரிசுத்தபிதா பாப்பரசின் இராச்சியமந்திரியாராய் இருந்தபோது தமது சகோதரியைத் தினமும்போய்ச் சந்திக்கும் வழக்கமுடையவராய் இருந்தார். பாப்பரசராகவந்த பின் தெலிபோன் வாயிலாக அவரின் சுகசேமங்களைத் தினமும் விசாரித்துவந்தார். தமது சகோதரியின் மரணத்தாலே பரிசுத்தபிதா ஆழ்ந்தகவலை கொள்ளலாயினாரென அறிவிக்கப்படுகிறது. இதுசெய்தி தமக்கு அறிவிக்கப்பட்டதும் அவர் தமதுகடமைகளை நிறுத்திவிட்டுத் தனிமையாகத் தமதுசிற்றாலயஞ்சென்று நெடுநேரம்மவுன செபத்தில் ஆழ்ந்திருந்தார். திங்கட்கிழமைகாலை அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திவ்விய பூசை நிறைவேற்றினார். பாப்பரசர் தற்போது 79 வயதுடையவராய் இருக்கின்றார். இன்னுமே சீவந்தராயிருக்கும் 75 வயதுடைய எலிசபேத் எனும் ஓர் இளையசகோதரியையே பாப்பரசர் தற்போது கொண்டிருக்கின்றார்.

செபமாலைக் கொடையாளி

இங்கிலாந்திலே லிவர்ப்பூல் நகரிலுள்ள நசரேத்இல்லத்தில் 61 வயதுடைய செல்வி ஜேட்றூட் ஜவேர்ஸன் எனும் மாது பெரும் செபமாலைக் கொடையாளியாக விளங்குகின்றாள். இற்றைக்கு 33 வருடங்களின் முன் ஓர்சிநேகிதி இவளிடஞ்சென்று, தனது சிநேகிதிஒருத்தியின் பிறந்தபெருநாளையிட்டு அவளுக்கு ஓர்செபமாலைவாங்கி வெகுமதிசெய்யப் பணமில்லையேயென்று அங்கலாய்த்தாள். இதைக்கேட்டதே செல்வி ஜேட்றூட் அனுதாபமுற்றவளாய்ச் செபமாலைகட்டத் தெரியாதிருந்தாலும் கொஞ்சம் கம்பியும், மணிகளும்வாங்கிச்சென்று ஓர் கன்னியாஸ்திரீயின் உதவியோடு செபமாலைஒன்றை அழகாகக்கட்டி அந்தச்சிநேகிதிக்குக் கொடுத்தாள். இதுநிகழ்ந்தது 1922-ம் ஆண்டு ஆடிமாதம் 14-ந் திகதியாகும். பின்னர் செபமாலைகட்டுவதிலே இவள் பெரிதுங் கரிசனை கொண்டவளாய் அதனைத் தனது ஞாயிறுவாரப் பொழுதுபோக்கு வேலையாக மேற்கொண்டாள். அதுமுதல் இவள் 22,000 செபமாலைகளுக்கு மேல் கட்டியிருக்கின்றாள். வாரந்தோறும் சில்லறைச்செலவுக்கென்று தான்வைத்திருக்கும் பணத்தைக்கொண்டு இவள் மணிகளும், கம்பிகளும் வாங்குகின்றாள். தான்கட்டும் செபமாலைகளையெல்லாம் உலகமுழுவதிலுமுள்ள பிறதேசமிஷன்களுக்கு நன்கொடையளிக்கின்றாள். யுத்தகாலத்திலே பட்டாளங்களுக்கென்று இவள் பல்லாயிரக்கணக்கான செபமாலைகள் கட்டியிருக்கின்றாள். செபமாலை கட்டத்தொடங்கியபோது மணிகள், கம்பிகளுக்கு இருந்துவந்த விலை தற்போது ஆறுமடங்காக அதிகரித்தபோதிலும் வாரந்தோறும் அதேதொகையான செபமாலைகளையே இவள் கட்டி வருகிறாள்.

கிறீஸ்துநாதரின் பாரியசுரூபம்

ரோமைநகருக்குச் சமீபமான ரொக்காடி பாப்பாஎன்றஉயரிய ஓர்குன்றின்மீது 126 அடிஉயரமான ஆதாரபீடம்ஒன்றின் மேல் 426 அடிஉயரமுள்ள கிறீஸ்துநாதரின் இராட்சத வெண்கலச்சுரூபம்ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. மக்களின் ஐக்கியத்துக்கும், சுபீட்சத்துக்கும், சமாதானத்துக்குமாகஉழைத்துவருவதும்,ரோமைநகரிலே தலைமைஸ்தானத்தைக் கொண்டிருப்பதுமான "கிறிஸ்துஸ்" எனும்சங்கமே அங்கு ஜோவின் அஞ்ஞானக்கோவில் இருந்துவந்த இடத்தில் இந்தச் சுரூபத்தை அமைக்கவிருக்கின்றது. சுரூபம் ஸ்தாபிக்கப்படவிருக்கும் மிகப்பாரிய ஆதாரபீடத்தினுள் ஓர்நூதன பொருட்காட்சிச்சாலை இருந்துவரும். அது உலகசமாதானத்துக்காகத் தொண்டாற்றிய மக்கள்எல்லோரினதும் சரித்திர வரலாறுகளை எடுத்துக்கூறும். இரவிலே சுரூபத்தினுடைய சிரசின் பின்புறத்திலிருந்து பெரிய தீபம்ஒன்று நெடுந்தூரம்வரையிலே ஒளிக்கதிர்வீசிக்கொண்டிருக்கும். இந்தஒளிக்கதிரை இத்தாலியிலிருந்து ஜிப்ரோல்ற்றர்வரையிலே பார்க்க முடியுமென்று கூறப்படுகிறது. சுரூபத்தை ஸ்தாபிக்கும் வேலை விரைவிலே ஆரம்பமாகும். அதற்குஏற்படும் செலவுபணம் உலகமுழுவதிலும் சேகரிக்கப்படவிருக்கிறது.

கருதினால் மின்ட்சென்ரிஆண்டவர்

சிறைச்சாலையிலிருந்து சென்ற மாதம் விடுதலைசெய்யப்பெற்றவரும், ஹங்கேரிய நாட்டின் திருச்சபை அதிகாரியுமான கருதினால் மின்ட்சென்ரிஆண்டவர் அந்நாட்டின் தென்பகுதியிலே லாஸ்லோ எனுமிடத்திலுள்ள கோட்டைஒன்றில் கொண்டுபோய் விடப்பட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. ஆனால், அவரின்நிலைமைபற்றியும், அவரைக்காணத் தரிசகர்கள் அனுமதிக்கப்படுகிறார்களா என்பது பற்றியும் தமக்கு யாதொன்றும் தெரியமாட்டாதென்று எஸ்ரெர்கொம் நகரிலுள்ள கருதினாலாண்டவரின் மாளிகை அதிகாரியொருவர் தெரிவித்திருக்கின்றார். விருத்தாப்பியமும், சுகத்தாழ்வும் காரணமாக அவருக்குவிதிக்கப்பட்ட சிறைத்தண்டனை நிறுத்தப்பட்டதெனச் சமீபத்திலே ஹங்கேரிய கம்யூனிஸ்தஅரசாங்கந் தெரிவிக்கலாயிற்று.

இரட்டைக் கோவில்

சமீபத்திலே பூர்த்தியடைந்த ரோமைநகரின் கனடியகோவிலானது ஒருகட்டடத்திலேயே இருகோவில்களைக்கொண்டிருக்கிறது. இரண்டிலும் இருபங்கு விசாரணைக்குருமார் பணியாற்றி வருகின்றனர். இந்தவகையிலே இவைகள் ரோமைநகரில் தனிச்சிறப்புப் பெற்றனவாகும். மேற்கோவிலிலே பலிபீடத்திற்கு மேலாகப் பத்தடிவரை குறுக்களவுடையநிரந்தரமான பெரிய கதிர்ப்பாத்திரம்ஒன்று இருக்கின்றது. அங்கு திவ்வியநற்கருணை இரவுபகலாக இடையறாது எழுந்தேற்றம் பண்ணி வைக்கப்பட்டிருக்கிறது. கீழ்க்கோவிலானது ஓர்பங்குக்கோவிலாகப் பாவிக்கப்பட்டு ஒழுங்காக ஆராதனைவழிபாடு நடைபெறுகின்றது. இதிலேயே இருகுருமாரும் கடமையாற்றி வருகின்றனர். இதற்குக்காரணம், அங்குவசிக்கும் கனடாதேசமக்கள் ஆராதனைவழிபாடு நடத்தும் கோவிலாகவும், அங்குள்ள இத்தாலியமக்களின் பங்குக்கோவிலாகவும் அதுஇருந்து வருவதேயாகும். இது 11,000 மக்களின் புதியபங்குக்கோவிலாய்த் தற்போது இருந்துவருகிறது. நற்கருணை நாயகிபேராலும், கனடியவேதசாட்சிகள் பேராலும் பிரதிட்டைசெய்யப் பெற்றுள்ள இந்தக்கோவிலில் திவ்வியநற்கருணைச் சபைக்குருமாரே தொண்டாற்றிவருகின்றார்கள்.

ஐரிஸ்பாஷையில் வேதபுத்தகம்

ஓர்ஐரிஷ்காரரான திரு. பியடர் ஓ'டப்டாஅவர்கள் 'பைபிள்' எனப்படும்வேதாகமத்தைஐரிஷ்பாஷையில் மொழிபெயர்த்து, முழுவதையும் தமதுகையாலேயே எழுதிமுடித்திருக்கின்றார். 30 லட்சம் சொற்களைக் கொண்டதாய்ப் பன்னிருவருடங்களாக அவர் வேலைசெய்து முடித்த இந்தவேதாகமம் டபிளின்நகரிலே லீன்ஸ்றர்மாளிகையில் இருந்துவருகின்ற ஐரிஷ்பாராளுமன்ற சபாநாயகரிடம் கையளிக்கப்பெற்று, ஐரிஷ்சாதியாருக்கு அளிக்கப்பட்ட ஓர்நன்கொடையாக அவரால்ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இது லீன்ஸ்றர்மாளிகை நூல்நிலையத்திலே ஒருமாதகாலம் இருந்துவரும். பின்னர் டபிளின்நகரிலுள்ள தேசீயசித்திரப்பொருட்சாலையில் நிரந்தரமாக வைக்கப்பட்டிருக்கும். ஐரிஷ்பாஷையிலே வேதபுத்தகத்தின் பூரணமான முதல் மொழிபெயர்ப்பு இதுவாகும்.

இஞ்ஞாசியாரின் யூபிலிவருடம்

யேசுசபையை அடியிட்டவரான அர்ச். இஞ்ஞாசியார் பரமபதமடைந்த நான்காம் நூற்றாண்டு வருடம் ஓர்யூபிலிவருடமாகக் கொண்டாடப்பட வேண்டுமெனப் பரிசுத்தபாப்பரசர் அதிகாரமளித்திருக்கின்றார். இந்தயூபிலிவருடம் அடுத்துநிகழும் 1956-ம் ஆண்டு ஆடிமாதம் 31-ந் திகதியன்று முடிவாகும். அதனால், அடுத்துவரும் பன்னிருமாதங்களிலும் அர்ச். இஞ்ஞாசியார் பிறந்தவிடமாகிய லொயலாவிலுள்ள கோவிலைச் சந்திக்கிறவர்கள் வழமையான நிபந்தனைகளுடன் யூபிலிப் பலன்களை அடைந்துகொள்வார்கள்.

ஆஸ்பத்திரியில் இருக்கின்றனர்

செஞ்சீனாவின் வடபாலுள்ள மஞ்சூரியாவிலே முக்டென்நகர் அதிமேற்றிராணியாரான பிஷுப்ஷி ஆண்டவர் இற்றைக்கு மூன்றுவருடங்களின்முன் கம்யூனிஸ்த சிறைச்சாலைஒன்றிலே இறந்துபோயினாரென நம்பப்பட்டுவந்தது. ஆனால், அவர் இன்னுமேசீவந்தராய் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்துவருகிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. "பிஷுப்ஷி அதிமேற்றிராணியார் கம்யூனிஸ்தர்களால் ஆறுவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்; ஆனால், மூன்றுவருடம் சிறைவாசஞ்செய்தபின் விடுதலைசெய்யப்பெற்று, மீதியான மூன்றுவருடங்களையும் தமதுமனையில்தானே சிறைவாசஞ் செய்துவருமாறு கட்டளையிடப்பட்டார்" என்று முக்டென்நகரிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புலிகளால் மனந்திரும்பியவர்கள்

சிலகாலத்தின்முன் வடஇந்தியாவிலுள்ள சக்கேயின் என்னும்கிராமத்திலே பெயரளவில் தானும் கத்தோலிக்கர் ஒருவர் இருக்கவில்லை. இந்தக் கிராமத்திலே மனுமாமிசபட்சணிகளான கொடியபுலிகள் அடிக்கடிபுகுந்து அச்சத்தை உண்டுபண்ணித் தென்பட்டவர்களைக் கொன்றுபட்சித்தும் வரலாயின. அவைகள் அநேகரைத் துண்டுதுண்டாகக் கீறிக்கிழித்தும்விடலாயின. அம்புகள் வில்லுகளுடனும், ஈட்டிகளுடனும் இந்தப்புலிகளை வேட்டையாடச்சென்ற வேட்டைக்காரர் கொன்றழிக்கப்பட்டனர். கடைசியாக அந்தக்கிராமவாசிகள் ஒருங்கேதிரண்டு தங்கள் கிராமத்தைவிட்டு வெளியேற முயன்றார்கள். மூன்றுதினங்களாகக் காட்டில்அலைந்தபின் சலேசியன்சபைக் குருமாரால் நடத்தப்படும் ஓர்விசாரணைப் பங்கை அடைந்தார்கள். தற்போது அந்தப்பகுதியில் இவர்கள்தான் மிகப்பெரிய கத்தோலிக்கசமூகமாய் விளங்குகின்றார்கள்.

தேவநற்கருணையில்
பக்தியுண்டாக்குவதற்கு
நற்கருணை மகாநாடுகள்
மிகவும் வாய்ப்பான
சாதனங்களாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாசி மாதம்

பொதுக் கருத்து: பெண்களின் உரிமைப் பிரச்சினைகளுக்குக் கிறீஸ்துவ படிப்பினையின் படி முடிவுகாணும்படியாக.

மிஷன் கருத்து: அறியாமையைப் போக்குவதில் கிறீஸ்துவ கல்வி முதலிடம் வகிக்கும்படியாக.

சத்தியவேத
பாதுகாவலன்

1955-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 1-ந் திகதி

அர்ச். வேணட் முனிவர் குருமடம்

(Communicated)

இற்றைக்கு எழுபத்தொரு ஆண்டுகளின்முன் ஆரம்பமான குருமடம் — 438 குருமாருக்குப் பயிற்சியளித்த குருமடம்—அமலோற்பவ மரியநாயகியின் சபை (O. M. I.) யைச் சேர்ந்த 14 குரு பண்டிதர்களின் தலைமையிலே நடாத்தப்பட்டுவந்த குருமடம்—மூன்று இலங்கை மேற்றிராணி மார்களுக்குப் பயிற்சியளித்த அர்ச். வேணட்குருமடம் 30-8-55 செவ்வாய்க் கிழமை கண்டியி லுள்ள அம்பிற்றியாவின் முன் னாள் பாப்பரசர் குருமடத் துக்கு மாறியுள்ளது. தற்போது இந்தக்குருமடம் 'லங்காமாதா' வின் குருமடமென அழைக்கப் படுகிறது.

அர்ச். வேணட் முனிவரின் குருமடம் 1884-ம் ஆண்டு மாசி மாதம் 1-ந் திகதியன்று வண. சார்ள்ஸ் கொலின் சுவாமியவர்களின் தலைமையிலே கொட்டாஞ் சேனையில் ஆரம்பமானது. இக்குருமடத்தில் முதன்முதலாகச் சேர்ந்து கொண்டவர்கள் பத்துப்பேர்மாத்திரமே. பின்னர் கொட்டாஞ்சேனையிலேபோதிய இடவசதியின்மையால் இவர்கள் மருதானையிலிருந்த "கதறம் மனை" (Gatherum House)எனும் இல்லத்துக்குச் சென்றார்கள். இங்கேதான் இக்குருமடத்துக்கு அர்ச். வேணட் குருமடமென்று நாமமிடப்பட்டது. இக்குருமடத்தை மகாமேன்மைதங்கிய கிறிஸ்தோப்பர் பொஞ்ஜீன் அதிமேற்றிராணியார் பெரிதும் கண்ணுங் கருத்துமாகப்பேணிப் பாதுகாத்துவந்தார்.

பிந்த மருதானையிலிருந்து பம்பலப்பிட்டிக்கு இந்தக் குருமடம் மாறிப்போனது. அப்போது குருத்துவமாணவர்கள் ஆரம்பத்திலே அறைவீட்டில் தங்கினர்கள். அப்பொழுது பம்பலப்பிட்டியிலே நவமாக வகுக்கப்பெற்ற விசாரணைப்பங்குக் கட்டளைக்குருவராயிருந்த வண. லூயிஸ் கொக்கில்சுவாமியவர்கள் (Louis Coquil) குருமடத்தின் தலைவராக நியமனஞ் செய்யப்பட்டார். இக்குருமடத்தின் குருத்துவமாணவருள் முதலாவது இலங்கையராகும் வண. சார்ள்ஸ் எட்மன்ட் பொன்சேகா பிறதருக்கு 1888-ம் ஆண்டு மார்கழிமாதம் 22-ந்திகதியன்று குருப்பட்டம் அருளப்பட்டது. ஆறுதினங்களுக்குப்பின் வண. அலெக்சாண்டர் கதேலிஸ்என்னும் மற்றோர் இலங்கையரான குருத்துவமாணவரும் குருப்பட்டாபிஷேகஞ் செய்யப் பெற்றனர்.

கடைசியாக அர்ச். வேணட் குருமடம் 1891-ம்ஆண்டு ஆனிமாதம் பொறளைக்குக் கொண்டு போகப்பட்டது. அங்கே 1910-ம் ஆண்டு பங்குனிமாதம் 10-ந் திகதியன்று இலங்கையரான எட்டுக்குருத்துவமாணவர்களுக்குக் குருப்பட்டம் அருளப்பட்டலாயிற்று. இவர்களில் ஆறுபேரும் அர்ச். அலோஷியஸ் சின்னக்குருமடத்திலிருந்து முதன்முதலாக இக்குருமடத்துக்கு அனுப்பப்பட்டவர்களாவர்.

வண. எமில் நிக்கலாஸ்சுவாமியாரின்பின் வண. எமில் நிக்கலாஸ் சுவாமியார்வரை மூன்று குருமார் அர்ச். வேணட் குருமடத்தின் தலைவர்களாயிருந்தனர். வண. எமில் நிக்கலாஸ் சுவாமியார் தலைமைவகித்திருந்த காலத்திலே 1920-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 30-ந் திகதியன்று தற்போது பொறளையிலே காட்சியளிக்கும் அர்ச். வேணட் குருமடத்தின் மேல் மாடிக்கட்டடத்துக்கு மகாமேன்மைதங்கிய அந்தோனி குடேர் ஆண்டவர் அத்திவாரக்கல்நாட்டினர். இப்புதியகட்டடம் 1921-ம் ஆண்டு கட்டிமுடித்து ஆசீர்வதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அடுத்த பத்துவருடங்களிலும் (1923 — 33) 49 குருமார் அதிலிருந்து வெளிகொண்டனர். இவர்களுள் மூவர்தான் இன்று இலங்கை மேற்றிராணிமாராகத் திகழ்கின்றனர். மகாமேன்மை தங்கிய தோமஸ் கூறேஆண்டவர், மகாவண. எட்மண்ட் பீரிஸ்ஆண்டவர், மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் என்பவர்களே அம்மூவருமாவர்.

வண. எமில் நிக்கலாஸ்சுவாமியாரின்பின் வண. மொனியர் (Monnier) சுவாமியார் குருமடத்தின் தலைவரானார். மேற்றிராசன பிறதர்மாருடன் ஒருங்கு சீவித்த அமலோற்பவ மரியநாயகிசபைப் பிறதர்மார் 1934-ம்ஆண்டு வைகாசிமாதம் 1-ந்திகதி மற்றோரிடத்துக்குச் சென்றனர். 1938-ம் ஆண்டு கெகன் (Gueguen) சுவாமியார் குருமடத்தின் தலைவரானார். அதன்பின் வண. லெக்கொக் சுவாமியாரும், அவர்பின் மிக வண. போர்தின்சுவாமியாரும் தலைவர்களானார்கள். இவர் குருமடத்தின் நூல்நிலையத்தை விருத்திசெய்தார். இன்னும் விடுமுறைகாலத்திலே குருத்துவமாணவர்களுக்கு உல்லாசப் பயணங்களை ஒழுங்குசெய்து கொடுத்தார். இவரது தலைமையிலே குருமடம் மிகவும்விருத்தியடைந்தது. 1947-ம் ஆண்டு மார்கழி 25-ந்திகதி மாட்டீன் குணரத்னசுவாமியவர்கள் இக்குருமடத்தின் 14-வது தலைவராக நியமனஞ் செய்யப்பெற்றனர். அன்றுமுதல் இன்றுவரை இக்குருமடத்துக்குத் தலைமைவகித்த பதினொரு தலைவர்களுள் முதலாவது இலங்கையர் இவரே. சுமார் ஐம்பதாண்டுகாலமாக இக்குருமடம் அடைந்துள்ள அபிவிர்த்தி இத்தலைவரது ஆற்றலுக்கு ஓர்சான்றாக அமைகிறது.

இத்துடன் அர்ச். வேணட் குருமடத்தின் சரித்திரத்திலே ஒருஅதிகாரம் முடிவடைகிறது. அம்பிற்றியாவிலே லங்காமாதாவின் குருமடத்திலே அதனுடைய சரித்திரத்தின் மற்றோர் அதிகாரம் தொடங்குவதாகும்.

சதாசகாயமாதா கோணம்

—:—

தேவமாதாவின் பிறந்த திருநாள்
(புரட்டாதி மாதம் 8-ந் திகதி)

நம்பிக்கையின் உதயம்

உலக சரித்திரத்திலே அதிபிரபையுள்ள நாட்களில் எங்கள் திருத்தாயாராம் கன்னிமரியம்மாளின் பிறந்த திருநாளும் ஒன்றாகும். குழந்தை மரியாயின் முதலாவதுபிறந்தினம் அன்னம்மாளுக்கும், சுவக்கீனுக்கும் வேறுசில கிட்டிய உறவினருக்கும் மாத்திரம் வெளிப்படையான ஆனந்தத்தை அளித்தது. ஆனால், எவரும் அறியாத பான்மையாக, வானதூதர்கள் இவ்வளவு அலங்காரமான மாதுசிரோன்மணியை உண்டாக்க—உலகுக்கு ஈயத் திருவுளங்கொண்ட தேவனை ஆனந்த மேலீட்டினால் புகழ்ந்து போற்றிக் கொண்டாடினர்கள். பின்னர் பதின்மூன்று வருடங்களுக்குப்பின் அதிதூதர்களில் ஒருவரான கபிரியேல்சம்மனசானவர் அவளைத் தரிசித்து "மங்களம்மரியே! பிரியபிரசாதபூரணியே!" என்று வாழ்த்துக்கூற அனுப்பப்பட்டார். அவளுடைய பிறந்த திருநாள் முன்ஒருபோதும் அறியாத, அனுபவியாத சந்தோஷத்தைக் கொடுத்ததென்பதை உலகம் காலதியில் உணர்ந்து கொண்டது.

திவ்வியமீட்பரின் தாயாக அவதரிக்க வேண்டிய கன்னிகையின் பிறப்பைப் பல்லாயிரம் வருடங்களாக யூதர் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சாத்தானோடும், பாவத்தோடும் போராட அவர்கள் வல்லமையற்றவர்களாக இருந்தார்கள். அந்தநாளும் வந்தது. குழந்தைவளர்ந்தது. கன்னிகை கிறீஸ்து என்னும் இரட்சகரை எங்களுக்குத் தந்தா. இதைவிடப் பெரிய, அளவில்லாத, விலைமதிக்கரிய கொடை இல்லை. அந்நாட்தொட்டு இந்நாள் மட்டும் மனுக்குலத்தின்மேல் தமது தெரியலான கொடைகளை, உதவி சகாயங்களைப் பொழிந்தவண்ணம் இருக்கிறா; அவ எங்கள் தாய். தாய்க்குரிய அன்போடு, தயாளத்தோடு தேவகொடைகள் நிறைந்த பொக்கிசசாலையிலிருந்து எங்கள்தேவைகட்குத் தக்கவாறு உதவி சகாயங்களைப் பகிர்ந்து கொடுக்கும் வேலையிற் கரிசனையாயிருக்கிறா.

ஆனால், மனிதர் இந்த நல்லதாயை மறந்தவர்கள் போலச் சீவிக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை இழந்தவர்கள் போலக் காணப்படுகிறார்கள். தங்கள் தேசிய, குடும்ப, கஸ்தி துன்பங்கள் மனுச்சந்ததியை உபாதிக்கின்றன. பஞ்சம், படை, கொள்ளைநோய், குரோதம், பாவம்முதலிய பல்வகைத் தீமைகளைக்கண்டு மனிதன் அவநம்பிக்கைக்காளாகிறான்; சஞ்சலப்படுகிறான்; உதவியின்றி ஏங்குகிறான். உதவி எப்போது கிடைக்கும்? ஆரிடமிருந்து கிடைக்கும்?

மரியாயிடமிருக்தே. மனிதர் தேவதாய்ப்பக்கமாக, அவளுடைய திருக்குமாரன் பக்கமாகத் திரும்பும்போதே. நாம் உபத்திரவப்படுவதைக்காண அவசகிக்க மாட்டா. நமக்குத்தேவையான உதவியைத் தேவசுதனிடமிருந்து பெற்றுத் தருவா. அவளுடைய பிறந்தநாளானது, அவ எங்களுக்கு உதவி செய்ய ஆவலாயிருக்கிறா, வல்லமையுள்ளவளாயிருக்கிறா என்ற உண்மையை ஞாபகப்படுத்தவேண்டும்.

அவளுடைய பிறந்த திருநாளில் சோபனவாழ்த்துகள் கூறுவோம். "மங்களம் மரியே! பிரசாத பூரணியே!" என்று திரும்பத் திரும்ப வாழ்த்துவோம்! அவளுடைய புண்ணிய சீவியத்தைப் பின்பற்றிநடக்க நமக்குத்தேவையான வரப்பிரசாதங்களைக் கேட்டு அடைவோம். எங்கள்சீவமே! எங்கள் மதுரமே! எங்கள் தஞ்சமே! வாழ்க! என்று எப்போதும் ஏற்றிப் போற்றுவோம்! மரியாயின்பிள்ளை ஒருபோதும் நித்தியமாய்க் கெட்டுப் போகாதென்ற வாக்கை மனதில் இருத்தி, அவளின் உண்மையான பிள்ளையாய்ச் சீவித்துவர கம்மாலானமட்டும் பிரயாசப்படுவோமாக. மரியாயே வாழ்க!

மதிப்புரைகள்

பிரான்சீஸ்கன் மூன்றும் சபையாரின் வழித்துணை

எழுதியவர்: சகோதரர் பிலிப்நேரி
கிடைக்குமிடம்: திரு. எஸ். என். சாமுவேல், மிருசுவில்
விலை: ரூபா 2-75

நமது பழைய தமிழ்இலக்கியங்களில் தவநிலை ஒழுக்கத்திலுள்ளவர்களைப் பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசிஎன மூப்பிரிவினராக வகுத்துள்ளார்கள். விவாகஞ்செய்யாது, வேதங்களோதி,விரதங்காத்தல்ஆகியஒழுக்கத்தில் உள்ளவன் பிரமச்சாரி. மணையாள் வழிபடத் தவம்செய்யும் ஒழுக்கத்தான் வானப்பிரஸ்தன். முற்றத்துறந்தவன் சந்நியாசி. முற்றத்துறந்தவர்களுக்கு எமது சத்தியதிருச்சபையில் பலசபைகளும், அவற்றிற்குரிய ஒழுங்குகளும் உள. ஆனால், முதலிருவகுப்பாராகிய உலகத்தவர்களுக்கெனத் திருச்சபையில் ஒரேஒரு சபைதான்உண்டு. அது அசிசிப்பதியரான அர்ச். பிரான்சீஸ்குவால் ஏற்படுத்தப்பட்டுள்ள பிரான்சீஸ்கன் மூன்றுஞ்சபையாகும்.

இச்சபை திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உலகமடங்களும் பரவியிருக்கின்றது. இச்சபையில் உலகத்தவர்கள் மாத்திரமல்ல, பாப்புமார், மேற்றிராணிமார், குருமார், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளும் சேர்ந்திருக்கிறார்கள். இதில்சேர்ந்தவர்களில் அநேகம்பேர் அர்ச்சியசிட்டர்களாகி யிருக்கின்றனர். ஆதலால், இதில் உலகத்தவர்களான கத்தோலிக்கர் ஒவ்வொருவரும் சேர்ந்துகொள்வது நலமாகும்.

இச்சபையைப்பற்றி அறிவதற்கு இதன் ஒழுங்குவிபரங்கள் அடங்கிய சிறந்தபுத்தகம் தமிழில் பெறமுடியாமல் இருந்தது பெருங்குறையாகும். முன்னர் வெளியான புத்தகங்களில் ஒருசிலபிரதிகளே இப்போது உள்ளன. இக்குறையை நீக்குவதற்காக அச்சபையின் சகோதரர் பிலிப்நேரி என்பவர் பலதமிழ்ப் புத்தகங்களையும், ஆங்கிலநூல்களையும் துணையாகக் கொண்டு "பிரான்சீஸ்கன் மூன்றும் சபையாரின் வழித்துணை" என்ற இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தைத் தொகுத்துள்ளார். யாழ்ப்பாணச் சபைக்கர்த்தர் அதிவண. சுவாமி என். யோசெவ் அவர்கள் இதற்கு முகவுரை கொடுத்திருக்கிறார்.

இது இருபாகங்களே அடக்கியுள்ளது. முதலாம்பாகத்தில் சபைஒழுங்குகள் விபரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம்பாகத்தில் செபங்கள், பலன்கள் ஆகியன அடங்கியுள. கைக்குஅடக்கமாக, கல்லகடதாசியில் அச்சிடப்பட்டுள்ளது. கத்தோலிக்கமக்கள் ஒவ்வொருவரும் இதைவாங்கி, வாசித்து இலகுவானதும், ஏராளமான ஞானப்பலன்கள் உள்ளதுமான இச்சபையில்சேர்ந்து, உத்தமவழியில் நடந்து, அதன்நன்மையை அடைவார்களாக. நமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

சதாநந்தன் வெள்ளிவிழா மலர் 1930—1955

அளவை, சதாநந்த வித்தியாசாலையின் வெள்ளிவிழா ஞாபகார்த்தமாக வெளிவந்துள்ள இம்மலரானது பல பெரியார்களின் பாராட்டுரைகளையும், அழகியகட்டுரைகளையும் தன்னகத்தே அடக்கியுள்ளது. போதிஞர்பகுதியில் விளங்கும் ஐந்துகட்டுரைகளும இம்மலரை அலங்கரிக்கும் பஞ்சரத்தினங்களாகத் திகழ்கின்றனவெனின் மிகையாகாது. பழையமாணவர்களின் கட்டுரைகள் இரண்டும், பாடசாலைமாணவரின் கட்டுரைகள்பத்தும் சதாநந்தனின் கலைத்தொண்டை விளக்கும் சான்றுகளாக மிளிர்கின்றன. சமயக்கல்வி, உடற்பயிற்சிக்கல்வி, இரசஞானக்கல்வி, செயற்றிறன்ஆகியாம் அறிவுக்கலைகளில் சதாநந்தனின் வளர்ச்சியை எடுத்துரைக்குமுகமாக மலரின் அறிவுக்கூலைப்பகுதி இலங்குகின்றது. பல்வகைப் போட்டிகளிலும் வெற்றியீட்டியமாணவர், மாணவிகளின் பிரதிமைகள் மலரைஅழகுசெய்து நிற்பதோடு பாடசாலையின் தரத்தையும் எடுத்துரைக்கின்றன. எனவே, கலைக்கோயிலாகத்திகழும் இக்கழகம் தங்க, வைர விழாக்களையும்கண்டு நீடுகோலம் நம்நாட்டுக்குத் தொண்டுசெய்வதாக! எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

பாடசாலைகளும் இலவச தேநீரும்

இலங்கைப்பாடசாலைகள் பலவற்றிற்கும் கடந்தபலவருடங்களாகத் தேயிலையும், சீனியும் இலவசமாக உதவிவந்த இலங்கைத்தேயிலைப் பிரசாரசபையானது 1956-ம்ஆண்டு தைமாசத்துடன் அதனை நிறுத்தப்போவதாகத் தெரிவித்திருக்கின்றது. ஓர்பாடசாலை இருந்துவரும் பட்டினசபை, கிராமச்சங்கம், சோமமுன்னேற்ற சங்கம், பெற்றூர் – ஆசிரியர் சங்கம்போன்றனவாய்ச் சமூகசேவையில் ஈடுபட்டுள்ள எந்தச்சங்கமாவது அப்பாடசாலைக்கு வேண்டிய சீனியைக்கொடுக்க முன்வருமிடத்து இலங்கைத் தேயிலைப் பிரசாரசபை இலவசமாகத் தேயிலை கொடுக்கத் தயாராயிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

* * *

● பாக்குநீரிணை விசாலிக்கப்பெற்று, பிறநாடுகளைச்சேர்ந்த பெரியகப்பல்களும், இந்தியகப்பல்களும் அதன்வழியாகக் கடந்துசெல்ல வசதிசெய்யப்படுமென்று இந்திய இராச்சியசபையிலே உதவிப்போக்குவரத்து மந்திரி சென்றவியாழக்கிழமை தெரிவித்திருக்கின்றார். பாக்குநீரிணையை விசாலமாக்குவதை ஆராய்ந்து, திட்டமான சிபாரிசுசெய்யுமாறு பிறநாட்டு நிபுணர்ஒருவர் நியமிக்கப்படவிருக்கின்றார்.

பல தேசங்களில்.

உழுவதற்கு யானைகள்

இமயமலைச் சாரலையடுத்தகாடுகளில் அலைந்துதிரியும் யானைகளைப்பிடித்துப் பழக்கியெடுத்து உழுவதற்குப் பயன்படுத்தும் திட்டமொன்றை உத்தரப் பிரதேச அரசாங்கம் செய்திருக்கின்றது. இதுவிஷயமாய் யானைகள் இழுத்துச்செல்லக்கூடிய கலப்பையைச் செய்வதற்கென மூன்றுவருடகாலமாக நடத்திவந்த ஆராய்ச்சியின் பயனாக கனீனமாதிரியான பெரிய கலப்பையொன்று கண்டுபிடித்துச் செய்யப்படலாயிற்று. பரிசோதனையிலே இக்கலப்பையை யானைஒன்று வெகு சுலபமாக இழுத்துச்செல்லக் காணப்பட்டது. யானைகளைக் கலப்பைகளில் உபயோகிப்பது, யந்திரக்கலப்பைகள் அல்லது எருமைகளை உபயோகிப்பதிலும்பார்க்க இலாபகரமானதென்றும், நிலத்தைஉழுவதற்கு யானையை உபயோகித்தால் ஏக்கர்ஒன்றுக்கு ஆறரை ரூபாவிகிதம் செலவாகுமென்றும் சொல்லப்படுகிறது. கமத்தொழில்நிபுணர்கள் செய்துவந்த ஆராய்ச்சிகளின் விளைவாக யானைகள் இழுத்துச்செல்லத்தக்க மூன்றுகலப்பைகளை இப்போதுசெய்திருக்கின்றார்கள்.

ஜனாதிபதியும் மஸ்கோவும்

ஜெனிவாநகரில்கூடிய நான்குவல்லரசுகளின் தலைவர்கள்மகாநாட்டுக்குப்பின் யுத்தநெருக்கடி ஓரளவு தளர்ந்திருக்கிறதென்றிப் பிரச்சினையாதொன்றும் தீரவில்லை. அடுத்த ஆண்டிலே அமெரிக்க புதியஜனாதிபதியின்தேர்தல் நடைபெறும் வரையில் ஜெனரல் ஐஸன்ஹாவர் திட்டமாக எதையும் செய்யமாட்டார்போல் இருக்கிறது. அதற்கிடையிலே "ஜனாதிபதி ஐஸன்ஹாவர் மஸ்கோவின் கம்யூனிஸ்தர்களுக்கு விட்டுக்கொடுக்கிறார்" என்று மைக்கார்தர்கட்சியினர் எதிர்ப்பிரசாரஞ் செய்துவருகின்றனர். அமெரிக்க எதிர்க்கட்சித்தலைவரும், முன்னர் அமெரிக்க ஜனாதிபதியாயிருந்து கோறியயுத்தத்தை நடத்தியவருமான திரு. ட்றூமன்அவர்களும் ஜெனரல் ஐஸன்ஹாவரைத் தாக்கியும், ஜனநாயகக்கட்சி அபேட்சகரான திரு. அட்லாய் ஸ்ரீவன்ஸனைஆதரித்தும் பிரசாரஞ்செய்து வருகின்றார். ஜெனிவாநகரிலே அமெரிக்க–சென்சீனப் பிரதிநிதிகள் நடத்திவரும் பேச்சுகளும் நான்குவாரமாக இழுபட்டுக்கொண்டேபோகிறது.

தீர்க்காயுளின் இரகசியம்

குருமார்இருவர்உட்பட நான்கு சகோதரர் தங்கள்மாமியாரான 102 வயதுடைய திருமதி மேரி பன்னன் அம்மையாரைச் சந்திப்பதற்காக ஐக்கியஅமெரிக்க தேசத்திலிருந்து சமீபத்திலே அயர்லாந்துபோய்ச் சேர்ந்திருக்கிறார்கள். சென்றபங்குனிமாதம்தன்னது 102-வதுவயதைக் கண்டுகளித்த இந்த அம்மையாருக்குத் தீர்க்காயுள்விஷயமாய் ஆராய்ச்சிநடத்திவரும் ஆஸ்பத்திரிஒன்று ஐக்கிய அமெரிக்கதேசஞ் சென்றுதிரும்ப இலவசபிரயாணச்சீட்டு வழங்கியது. ஆனால், அம்மையாரோ அயர்லாந்தைவிட்டு வெளியே செல்ல மறுத்துவிட்டாள். டபிளின்நகரிலே வசித்துவருகின்ற இவள் அதிகம் உவப்பாகச் செய்துவரும்காரியம் செபமாலைசொல்லுவதே. ஆடம்பரமற்ற நல்லஉணவு, உருளைக்கிழங்கு, பால், கஞ்சி, கிரைவகை ஆகியனவே தனது நீடாயுளுக்குக் காரணமென்று இவள் கூறுகின்றாள். தனதுசீவியகாலத்தில் சுருட்டு, சிகரெற் ஒருபோதுமே இவள் புகைத்தறியாள். புகைத்தலை இவள் குறிப்பணச்செலவும், சுகத்துக்குக்கேடுமென்று இவள்எண்ணுகின்றாள். இப்பாட்டியைத் தரிசிக்கச்சென்ற அவளின்மருமக்கள், வண. ஜே. ஜே. போகாட்டிசுவாமியார், வண. ஜே. போகாட்டி சுவாமியார், டக்டர் மைக்கேல் பொகாட்டி, நீதிபதி பி. பொகாட்டிஆன்பவர்களே. இவர்களின் வேறுமூன்று சகோதரர்கள் கடந்தசிலவருடங்களிலே ஐக்கியஅமெரிக்கதேசத்தில் மாணமாயினர். அவர்கள்மூவரும் குருமாரே.

எலியாஸ்தீர்க்கதரிசி குகை

பலஸ்தீனவிலே கார்மேல்மலையின் அடிவாரத்தில் எலியாஸ்தீர்க்கதரிசி குகையெனவழங்கும் குகையொன்று இருக்கிறது. எலியாஸ்தீர்க்கதரிசி தமது இறுதிகாலத்தில் இக்குகையில்தான் தங்கியிருந்ததாகப் பாரம்பரியவரலாறு கூறுகிறது. வருடந்தோறும் அவருடைய திருநாளாகிய ஆனி 14-ந் தேதியன்று கார்மேல் சபைக்குருமாருக்கு அதற்குள்ளே சென்று நிவ்வியபலியுசை நிறைவேற்றும்உரிமை இருந்துவந்துள்ளது. பலஸ்தீனைநாடு முகமதியரின்ஆட்சியில் இருந்துவந்தவரையில் இவ்வுரிமைக்கு எவ்விதத்திலும் தடங்கல்ஏற்பட்டதில்லை. ஆனால், இப்பகுதி இஸ்ரயேல் என்ற புதியயூதஇராச்சியத்தின் ஒருபகுதியாக இப்பொழுது இருந்துவருகிறது. கடந்தவருடம் ஆனி 14-ந்தேதியன்று கார்மேல்சபைக் குருமார் இந்தக்குகைக்குள் சென்றபோது மதவெறிகொண்ட யூதர்கள் பெரியகுழப்பம் உண்டுபண்ணினர். இவ்வருடம் அத்தகையஅசம்பாவிதம் நேர்ந்துவிடாதபடி தடுக்கும் நோக்கத்துடன் கார்மேல்சபைக்குருமார் குகைக்குள் நுழைந்தபோது அவர்களுடன் ஹாய்பாகர் முனிசிப்பல்சபைப் பிரதிநிதியொருவரும், இஸ்ரயேல்அரசாங்கத்தின் மதப்பகுதிமந்திரியின் பிரதிநிதியொருவரும் சென்றிருந்தனர். ஆயினும், குகையின் வெவ்வேறு இடுக்குகளில் ஏற்கனவே கூடியிருந்த யூதர்கள் தொடக்கத்திலிருந்தே கடைசிவரை இடையிடையே கத்திக்கொண்டிருந்தார்கள்.

● பாகிஸ்தானின் புதிய அரசியல் நிர்ணய மகாசபையின் உதவிஸ்பீக்கர் – அதாவது உபசபாநாயகராகத் திரு. சி. ஈ. கிப்பன்ஸ்எனும்கத்தோலிக்க பிரமுகர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றார். இவரும், திரு. பி. கோமெஸ்அவர்களுமே புதியஅரசியல்நிர்ணய மகாசபையின் இருகத்தோலிக்க அங்கத்தவர்களாவர்.

● பிரித்தானிய முன்னைநாள்பிரதமரான சேர் வின்ஸ்றன் சேர்ச்சில் அவர்களின் பன்னிருவயதுப் பௌத்திரனே "ஏழையும் இளவசனும்" என்னும் ஆங்கிலப்படத்தில் நடிக்கவைக்க இருபிரபல ஹொலிவூட் படத்தயாரிப்பாளர் முயன்றுவருகின்றனர். இந்தப் பாலியனின்நாமமும் வின்ஸ்றன் சேர்ச்சில்தான். "நடிக்கப் பிறந்தவன்அவன்" என்று ஏலவேஅவனும் பாராட்டப்பட்டுவிட்டான்.

● ஐக்கியஅமெரிக்க தேசத்திலே உவாஷிங்ரனுக்குக் கிழக்கேயுள்ள குடாக்கடலில் மனிதமுகம்படைத்த ஓர்வகைமீன்கள் இருப்பதாகப் பேர்பெற்ற இயற்கை ஆராய்ச்சியாளரான திரு. கில்பேட் கிளிங்கல்அவர்கள் கூறுகின்றார். இந்த மீன்களுக்குக் கொம்புகள் இருக்கின்றனவாம். இவைகள் நன்றாக நீந்துவதோடு கடலின்அடியிலுள்ள பாறைகளிலிருக்கும் பூச்சிகளைப்போல் தாவிக்குதிக்கின்றனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங். S. A. பேர்ஞண்டோ, S. S. J. பிறதர் அவர்களின் தேகவியோகம்

சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசர்களில் அதிகாலங்கண்டவராய், பல வருடகாலம் நமதுசஞ்சூசையப்பர் அச்சகத்தின் உபதலைவராய், ஊர்காவற்துறை முதலாம் இடங்களிலே தமதுசபையாரால் நடத்தப்பட்டுவந்த பல்வேறுகலாசாலைகளிலும் ஆரம்பகல்விஆசிரியராய் விளங்கிப் பலராலும் நன்கறியவுமு, கன்குமதிக்கவும் பெற்றிருந்த சங். எஸ். ஏ. பேர்ஞண்டோ பிறதர்அவர்கள் விருத்தாப்பியநோய் கண்டிருந்து அந்திய தேவதிரவிபஅனுமானங்களோ கல்லறிவுடன் பெற்றுச் சென்ற 27-ந்திகதி சனிக்கிழமை இரவு 10 மணிவரையில்காலஞ்செல்லலாயினுரெனும் துயரசெய்தியைஅறிந்து பெரிதும் மனம்வருந்தலானோம். இவர் 1871-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 29-ந்திகதி பிறந்தாராதலின் மரிக்கும்போது இவருக்குவயது 84.

சங். பிறதர் பேர்ஞண்டோஅவர்கள் கரவெட்டியிலே, முதலிமார்மரபிலே,உயர்சைவவேளாணகுடும்பமொன்றில்பிறந்து, கரவெட்டி, புலோலி ஆங்கிலகலாசாலைகளிற் கல்விபயின்று, தேவானுக்கிரகத்தாலே மனந்திரும்பி நம்திருமறையைத்தழுவி, தம்மூடைய வாலிபப்பிராயத்திலே சஞ்சூசையப்பர் சந்நியாசசபையிற்சேர்ந்து, 1899-ம் ஆண்டு முதல்வாக்குத்தத்தமும், 1908-ம்ஆண்டு நித்தியவாக்குத்தத்தமும் கொடுத்தார். தாம் ஆசிரியத்தொண்டாற்றிய இடங்களிலெல்லாம், நமது அச்சகத்தின் உபதலைவராய் இருந்தகாலமெல்லாம் தமது அனுதாபசிந்தையாலும், அயராதஊக்கத்தாலும், அன்பாதரவாலும் எல்லோருக்குமே ஓர்அன்பாய், அருந்துணையாய் விளங்கிவரலாயினர். சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசர்களில் ஒருவராய், தமிழிலேபெரிதும் பாண்டித்தியமுற்றவராய்ப் பிரஸ்தாபம்பெற்றிருந்துகாலஞ்சென்ற சங் எஸ். ஏ. போல்பிறதர் இவரின்சகோதரராவர். இவரின் பிரேதசேமம் மறுநாள்சாயங்காலம் கொழும்புத்துறைத்தாபன மாணவர்களும், ஏனையோரும் திரளாகக்கூடியிருந்தசமூகத்திலே வண. பி. நிக்கலஸ் சுவாமியவர்கள் மற்றுங்குருமாருடன் துக்கசங்கீதம்பாடிக் கடைசி ஆசீர்வாதம்கூறிநிற்க அமைதியாக நடந்தேறியது.

R. I. P.

● இரத்தம் அவசியம்தேவைப்படுகின்ற நோயாளிகளுக்குப் பயன்படத்தக்கதாக இரத்தோபகாரிகள்பலரும் தங்கள்சரீரத்திலிருந்து இரத்ததானஞ் செய்துவருகின்றார்கள். நியூசீலாந்திலே 56 வயதுள்ள ஓர்ஸ்திரி கடந்தபத்து வருடகாலத்திலே 72 முறை தனது உடலிலிருந்து இரத்ததானஞ் செய்திருக்கிறாள்.

நேரியகுளத் தபால்

வன்னிப்பகுதியைச் சேர்ந்த நேரியகுளத்திலே கோவில்கொண்டிருக்கும் கப்பலேந்திமாதாவின் திருநாள் சென்ற 28-8-55 ஞாயிற்றுக்கிழமை பக்திச்சிறப்பாக நடைபெற்றது. மூன்றிய ஐந்து தினங்களிலும் திருவிழாக்கள் நடந்து, 27-ந் திகதி வேஸ்பரும், 28-ந் திகதி காலை பாடற் பூசையும் வண. பொன்னையா சுவாமியவர்களால் நிறைவேறின. ஈற்றில், மாதாவின் திருச்சுரூபம் அலங்கரிக்கப்பட்ட கேடயத்திலே கீதங்களுடனும், வாத்தியஇசைகளுடனும் சுற்றுப்பிரகாரமாகக்கொண்டுசெல்லப்பட்டது. அதேவருடங்களுக்குப்பின் இவ்வருடம் இரண்டாம் முறையாக இத்திருநாள் கொண்டாடப்படலாயிற்று. கத்தோலிக்கர்மாத்திரமன்றிப் பிறசாகியத்தாரும், சமயத்தாரும் இதில்பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. — வன்னி நிருபர்

பாலர் பக்கம்

அண்ணை சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

இவ்வாரம் — நாளைகின்றுவரும் மூன்றாந்திகதி சனிக்கிழமையன்று உலக மெங்கும் அர்ச். பத்தாம் பத்திநாதர் திருநாள் கொண்டாடப்படும். குருமார் எல்லோரும் இவ்வர்ச்சிய சிட்டருடைய திருநாட்பூசை செய்வார்கள். மந்திரமாலைச் செபமுஞ் சொல்லுவார்கள்.

பத்தாம்பத்திநாதர் சென்றவருடம் அர்ச்சியசிட்டரின் இடாப்பிற் சேர்க்கப்பட்டார். விசுவாசிகளை அடிக்கடி நற்கருணை உட்கொள்ளும்படி தூண்டியவர் இவர்தான். சிறுவர்கள் நற்கருணையைப் பற்றி அறிந்தவுடன் அதை உட்கொள்ளலாம்; பன்னிரண்டு, பதினொன்று வயதுமட்டும் காத்திருக்கத் தேவையில்லையென்று கற்பித்தவரும் இவரே.

சிறுவயதில் நற்கருணை உட்கொள்ளவும், தேவநேசத்தில் வளர்ந்து தூயசீவியத்தை நாடவும் உங்களுக்கு வழிதிறந்தவர் இவராகையால் இவருடைய திருநாளை நீங்கள் கொண்டாடுவது தகுதியன்றே!

அன்று திவ்வியபூசைக்குச் சமூகங்கொடுங்கள். திவ்வியநன்மை வாங்குங்கள். பத்தாம்பத்திநாதருக்கு அர்ச்சியசிட்டபட்ட மகிமை கிடைத்ததையிட்டுச் சர்வேசுரனுக்கு நன்றிகூறுங்கள். அவர் நற்கருணையில் கொண்டிருந்த பத்தியை நீங்களும் கண்டு பாவியுங்கள். சுபம்!

* * *

எமது இலங்கைத்தீவின் தலைப்பட்டணம் கொழும்பு. கொழும்பு மாநகரத்தின் பாதுகாவலர் அர்ச். பிரகாசியம்மாள் (சந்தலூசியா). கொழும்பின் பேராலயம் அவவுக்குப் பிரதிஷ்டை பண்ணப் பட்டிருக்கிறது.

இப்பொழுது அதிமேற்றிராணியார் செய்துகொண்ட மனுவின்பேரிலே பரிசுத்தபிதா அருளிய அங்கீகாரத்தோடு அர்ச். லவுறேஞ்சியார் கொழும்பு நகரத்தின் சமஸ்தையுள்ள பாதுகாவலராகப் பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கிறார்.

ஞானஸ்நான வேளையில் குழந்தைகளுக்கு இரண்டு, மூன்று பாதுகாவலர்களுடைய பெயர்களைக் கொடுப்பதுபோல், கொழும்பு நகரமும் லூசியம்மாளுடையவும், லவுறேஞ்சியாருடையவும் பாதுகாவலைப் பெற்றிருக்கின்றது.

மேலும், தியாக்கோனை அர்ச். லவுறேஞ்சியார் கத்தோலிக்க சேவையாளருக்கும் ஓர்பாதுகாவலர் என்பதையும் நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

இவர் தமது குருவுக்குப் பிரமாணிக்கமுள்ள சீஷனாயிருந்தார். ஆலயப் பணிவிடைகளைச் செவ்வனே செய்து வந்தார். வறியோருக்கு உதவிசெய்தார். வேதசத்தியத்தை வேதவிரோதருக்கு எடுத்தோதினார். வேதத்துக்காக முகமலர்ச்சியுடன் பாடுபட்டார்.

வேததொண்டர்களும், கத்தோலிக்கசேவா சங்கத்தவர்களும் இதைக் கவனிப்பார்களாக. சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணை.

பெந்தெக்கோஸ்துவின் பின் 14-ம் ஞாயிறு

நிருபம்: கலாத். 5:16-24

கிறீஸ்துவொழுக்கத்தில் இன்றியமையாத போராட்டத்தைப் பற்றிக்கூறுகிறார் அப்போஸ்தலரான சின்னப்பர். கிறீஸ்துநாதரைப் பின்பற்ற நாம் எவ்வளவு கண்மனங்கொண்டாலும் எமது கீழாங்கிஷம்—அதாவது சென்மபாவத்தினால் புண்பட்ட சுவாபம் எம்மை எதிர்த்துக்கொண்டே யிருக்கிறது.

கற்பனைகள் பத்தும் தேவநேசம், பிறர்நேசம் என்னும் இருகற்பனைகளுள் அடங்குவதுபோல, புண்ணியங்களை அனுசரிக்கும் முயற்சிகள் எல்லாவற்றையும் ஒன்றில் அடக்கலாம். அதாவது, தேவஆவியின் ஏவுதலின்படி நடத்தல். அப்படிநடந்தால் புண்பட்ட சுவாபத்தின் இச்சையாட்சிக்கு உட்படமாட்டோம் (16).

தேவஆவியின் ஏவுதலும், இச்சைகளின்வீறும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவை. தேவஏவுதல் மோட்சத்தைநாட, இச்சைகளோ கீழ்நோக்குகின்றன. இந்தப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறபடியால் ஞானவிசாரத்தின்படியே நாம் ஆசிப்பதை நிறைவேற்றமுடிவதில்லை (17).

தேவஏவுதலின்படி நடந்தால், கற்பனைகள் நமக்கு விதிக்கும் தண்டனைகளுக்கு நாம் ஆளாகமாட்டோம். மேலும், கட்டளைகள் நமக்குக்கடமைகளை எடுத்தோதுமல்லாமல், அவைகளை நிறைவேற்ற உதவி தருவதில்லை. ஆகையால், பழையஏற்பாட்டுச் சடங்காசாரங்களைப் பற்றிப் புதுக்கிறீஸ்தவர்கள் விவாதிப்பதிற் பயனில்லை.

மாமிசத்தின் — அதாவது பாவக்கறைபிடித்த சுவாபத்தின் வேலைகள் அல்லது விளைவுகள் எவையென்று விபரம் கூறப்படுகிறது. இவை நான்குபிரிவுகளுள் அடங்கும். அசுத்தத்தனம், அவபக்தி, எதிர்ப்பு, மட்டின்மையாகிய நான்கும் எல்லாப்பாவங்களையும் அடக்கும். இக்குற்றங்களைக் கட்டிக்கொள்ளுகிறவர்கள் உலகமுடிவுகாலத்தில் மோட்சஇராச்சியத்திற் சேரமாட்டார்கள் என்று பொதுத்தீர்வைக்குமுன் அறிவிக்கிறார் சின்னப்பர்.

மாமிசத்தின் விளைவுகளைக் கூறியவர் தேவஆவியின் ஏவுதல்களைக் கூறாமல் விடவில்லை. இவை முன்கூறியபாவங்களுக்கு எதிரான புண்ணியங்கள். இவைகளை அனுசரிக்கிறவர்கள் சட்டங்கள்கூறும் தண்டனைகளுக்குப் பயப்படத் தேவையில்லை.

இறுதியில் பெரியதோர் உண்மையை — நாமெல்லோரும் மனதில் எப்போதும் கொண்டிருக்க வேண்டிய உண்மையைக் கூறுகிறார். அதாவது, "கிறீஸ்து(யேசு)வுடையவர்கள் (சொந்தமானவர்கள்) தங்கள் மாமிசத்தை அதன் தூர்க்குணங்களோடும், இச்சைகளோடும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். ஏன் "அறைந்த" தென்றார்? யேசுவின் மரணத்தைக்குறித்து அப்படிச்சொல்லி, நாமும் அவரைப் பின்பற்ற வேண்டுமென்று காட்டுகிறார். எங்கள் துட்டஆசைகளை நாம் எப்போதும் கொலைசெய்ய வேண்டும்.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

திருப்பலி

கடைசிப் பிரார்த்தனை

சொத்தி ஹேர்மன்! சொத்தி ஹேர்மன்!! ஓர்விசித்திரப் பேர்தான். இவர் தொளாயிரம் வருடங்கட்குமுன் சுவேபியாவில் பிறந்தாராஞலும், இன்னும் இந்தப்பெயர் அவருக்கு வழங்குகிறது.

ஹேர்மன் பிறப்பிலேயே ஓர்முடம். மற்றுஞ் சிறுவரைப்போல் நடக்கவும், ஓடியாடி விளையாடவும் அவரால முடியவில்லை. பாடசாலையிலே இன்னும் அதிக கஷ்டப்பட்டார். ஆனால், ஹேர்மன் மனஞ் சலனத்தவரல்ல. கர்த்தர் தந்தபுத்தியைக் கூர்மையாக்கி நல்லகல்விமான் ஆயினர்.

இத்தச்சொத்தி காலகதியில் ஓர்சந்நியாசியானர். அநேகர் அவரிடம் கல்விகற்க வருவார்கள். அவரிடம் சரித்திரம், கணிதம் படிக்க மாத்திரமல்ல, அர்ச்சியசிஷ்டதனம், புண்ணியம் முதலியவைகளையும் படிக்க வருவார்கள்.

ஹேர்மன் சரித்திரம் எழுதினர். வேதசம்பந்தமான பாக்களும் இயற்றினர். "கிருபைதயாப" மந்திர கீதத்தை இவரே எழுதினர் என்று அநேகர் எண்ணுகின்றனர். இதை நாம் சாதாரணபூசைமுடிவிற் செபிக்கிறோம்.

இது உங்களுக்குத் தெரியக் கூடும். இதை நீங்கள் செபிக்கும்பொழுது சொத்தி ஹேர்மனையும் நினைத்துகொள்ளுங்கள்.

கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க! — எங்கள் சீவமே, எங்கள் மதுரமே, எங்கள் தஞ்சமே வாழ்க! — பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள் உம்மைப் பார்த்துக் கூப்பிடுகிறோம். — இந்தக் கண்ணீர்க் கணவாயிலிருந்து பிரலாபித்த அழுது உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம். — ஆதலால், எங்களுக்காக வேண்டி மன்றாடுகிற தாயே! உம்முடைய தயாபரமுள்ள திருஇரக்கக் கண்களை எங்கள்பேரிலே திருப்பியருளும். — இதுவன்றியே நாங்கள் இத்தப் பரதேசங் கடந்தபிற்பாடு உம்முடைய திருவயிற்றின் கனியாகிய யேசுநாதருடைய பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும்.

கிருபாகரியே, தயாபரியே, பேரின்பரசமுள்ள கன்னிமாமரியே!

சீவியகாலத்தில் ஹேர்மன் அதிகதின்பத்தை அனுபவிக்க வேண்டியவரானர். எமக்கு வருவதுபோல அவருக்கும் "நான் ஏன் வேதனைப்பட வேண்டும்?" என்ற எண்ணம் வந்திருக்கும். இக்கேள்விக்கு மறுமொழி அவருக்குத் தெரியாமலில்லை. நாம் ஆதாம், ஏவாளின் மக்களாயிருப்பதுதான் காரணம்.

எங்கள் ஆதிப்பெற்றோர் சிங்காரத் தோப்பிலிருந்து தரத்தப் பட்டனர். அவர்களும், அவர்களுடைய பிள்ளைகளும் அங்கு திரும்பிப்போக முடியவில்லை. தங்கள் துன்பங்களையிட்டு அழுது பிரலாபித்துக் கொண்டு மாணக் கணவாயில் சீவிக்க வேண்டியிருந்தது.

சொத்தி ஹேர்மனும் ஏவாளின் ஏழைப்பரதேசமக்களில் ஒருவர். ஆனால், அவர் யேசுவின்தாயாகிய மரியாயை நோக்கினர். அவவை மன்றாடினர். ஏனெனில், கவலை நிறைந்த தமது சீவியத்துக்கு அவ மதுரமும், தஞ்சமும் அளிப்பாவென அவர் அறிவார்.

சொத்தி ஹேர்மனை யேசுவிடம் கொண்டுபோவா. சீவிய காலத்தில் அவருக்காக யேசுவிடம் மன்றாடுவா. மரணம்வரும்பொழுது அவரைத்தமது குமாரனிடம் கொண்டு செல்லுவா. ஆதலால், வருத்தப்பட வேண்டியிருந்தாலும், சிறுஹேர்மன் சந்தோஷமாயிருந்தார். வளர்ந்தபொழுதும் அந்தச் சந்தோஷம் அவரைவிட்டகலவில்லை. ஏனெனில், பட்சம், அன்பு, மதுரம் நிறைந்த கன்னிமரியாய் அவருடைய உத்தம தாயாயிருந்தா.

நானும் ஒரு குருவாகவர ஆசைப்படுகிறேன்

அன்ரன் ஓர்கல்ல பிள்ளை. தேவபக்தி உள்ளவன். சற்குணம் உடையவன். அவனுடைய தாய்தந்தையர் மிகவும் வறுமைப்பட்டவர்கள் என்றாலும் வறுமையில் செம்மையாக வாழ்க்கை நடத்தித் தங்கள்ஏகபுதல்வன் அன்ரனை ஓர் பாடசாலையில் விட்டுப் படிப்பித்து வந்தனர். அன்ரன் ஒன்பதாம்வகுப்பில் படித்துவரும்போது ஒருநாள் அந்த ஊர்ப் பங்குக்குருவானவர் பாடசாலைக்குச்சென்று அதில்படிக்கும் மேல்வகுப்பு மாணவர்களுக்குக் குருத்துவ அழைத்தலைப்பற்றிச் சில புத்திமதி கூறினர். அதைக் கேட்டுநின்ற அன்ரன் சாயந்தரம் பாடசாலைமுடிந்ததும் எவருடனும்பேசாது மவுனமாக ஏதோ யோசித்தபடியே வீடு போய்ச்சேர்ந்தான். அன்றுமுதல் அன்ரனின் நடத்தையில் ஓர்பெரிய மாற்றம். அவனுடைய கவனபோக்கு அவன்தாய்க்கு விபரீதமாய்க்காணப்பட்டது. அதனால், அவள் ஒருநாள் மாலைவேளை மகனிடம் சென்று, "என்ன அன்ரன், சிலநாட்களாக நீ ஒருமாதிரியாய்க் காணப்படுகிறாய்; என்னநடந்தது? கருமத்தைச் சொல்" என்று பரிவாக அவனைக் கேட்டாள். அப்போது அன்ரன்

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பாடசாலையிலே பங்குக்குருவானவர் சொன்னதை யெல்லாம் தெளிவாக எடுத்துக்கூறி, "நானும் ஒருகுருவாகவர ஆசைப்படுகிறேன்" என்று சொல்லி முடித்தான்.

இதைக் கேட்ட தாய் ஏங்கித் திகைத்து, "மகனே! நீயே எங்கள்ஏக கதி என்றுஎண்ணி இருந்தோம்; எங்கள் குடும்பத்தில் ஒரேயொரு பிள்ளை நீ; உன்னையே எங்கள் கண்ணென்று கருதி இவ்வளவு பாடுபட்டு வளர்த்தோம்; நீயோ எல்லாம் மறந்து குருவாக வரப்போகிறாயா?" என்று சொல்லி உரத்த சப்தமாக அழுதாள். தாய் அழக்கண்ட மகனும் அவளுடன் சேர்ந்து அழுதான். பின்பு தாயைப் பார்த்து, "அம்மா! நீங்கள் அழவேண்டாம்; உங்களுக்குத் தேவையானதை எல்லாம் கடவுள் உங்களுக்குத் தருவார்; நீங்கள் என்பிரிவை நினைத்து மனங்கலங்க வேண்டாம்; என்னைப்போல் பன்மடங்கான பாக்கியத்தைக் கடவுள் உங்களுக்குத் தர ஆயத்தமாய் இருக்கிறார்; அவரில் நம்பிக்கையாய் இருங்கள்" என்று பலவாறு சொல்லித் தாயைத்தேற்றினான். தாயும் மகன் சொன்னதைக் கேட்டு மனம்மாறி, "நீ உன் விருப்பப்படி செய்வாயாக" என்று உத்தரவு கொடுத்தாள். அவன் உடனே கட்டளைச் சுவாமியாரிடம் சென்று தன் விருப்பத்தைத் தெரிவித்தான். சுவாமியார் அவனுடைய விருப்பத்தைக் கண்டு அதிசயப் பட்டனர். அடுத்த வருடம் அவனைக் குருமடத்துக்குப் படிக்க அனுப்பினார். அவன் தன்தாய், தந்தையருடைய உத்தரவுடனும், குருவானவரின் ஆசியுடனும் குருமடத்துக்குச் சென்று கற்கவேண்டிய வேத சாஸ்திரங்களை நன்குகற்று இப்போது ஒரு குருவாக விளங்குகிறார்.

ம. அந்தோனிப்பிள்ளை,
இளவாலை.

✝

மிருசுவில் வாசரான
திரு. S. N. சாமுவேல்
அவர்களின் புதல்வியான
திருமதி மேரிபிலோமினா இராசாத்தியின்
15-ம் வருட மரணஞாபகம்

ஆண்டுகள் மூவைந்து சென்ற பின்பும்
ஆரமுதே எம்மகளே கவலை மேலும்
மூண்டெரிய தம்மாவுன் பிரிவா லையோ
முதுமைக்கு முனைநம்பி வாழ்ந்து வந்தோம்
கூண்டிருக்கப்பறந்துசென்றகுருவிபோலக்
குணவதியே விண்ணாடு சேர்ந்தா யுந்தன்
வேண்டுதலை நம்புமுன தன்னை தந்தை
வேதனைகள் தீரமன் றாடுவாயே.

மிருசுவில். பெற்றோர்.

நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பாரிசவாதநோயால் பீடிக்கப்பட்டு வருந்தியஎனதுதாயார் யேசுவின் திருஇருதயத்தின் கிருபையினாலும், சதாசகாயமாதாவின் இரக்கத்தினாலும் அந்நோய் அற்புதமாக நீங்கப்பெற்றுப் பூரணசுகம் பெற்றுள்ளா. திருஇருதயஆண்டவருக்கு ஸ்தோத்திரமும், நற்சகாயமாதாவுக்கு நன்றியும்கூறி நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

சூராவத்தை, A. J.

* * *

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், அர்ச். லூர்துநாயகி, அர்ச். றீத்தம்மாள், அர்ச். ஆரோக்கியநாதர் இவர்களின் மன்றாட்டினாலும் சென்றவருஷத்தில் எனக்கிருந்த பலவியாதிகளும் நீங்கப் பெற்றுச் சுகம்அடைந்துள்ளேன். திருஇருதயநாதருக்கு ஸ்தோத்திரமும், மற்றும் அர்ச்சியசிஷ்டர்களுக்கு மகிமையும் உண்டாவதாக. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

சூராவத்தை, A. J.

என்ன காண்கிறோம்?

"ஜெயம்"

சூரியனில் சந்திரனில் என்னகாண்கிறோம்?
சோதிவீசி உதவுகின்ற சிந்தைகாண்கிறோம்.
மாரிபெய்யும் போதுநாங்கள் என்னகாண்கிறோம்?
மானிலத்தைக் குளிரவைக்கும் மாட்சிகாண்கிறோம்.

மண்ணகத்தில் மரஞ்செடியில் என்னகாண்கிறோம்?
மனங்கனிந்து நிழல்விரிக்கும் வண்மைகாண்கிறோம்.
பண்ணிசைக்கும் அருவிதன்னில் என்னகாண்கிறோம்?
பயிர்செழிக்கப் பாய்ந்துசெல்லும் பண்புகாண்கிறோம்.

ஆற்றின்மீதும் ஊற்றின்மீதும் என்னகாண்கிறோம்?
அள்ளியள்ளி இறைத்துவாழும் அன்புகாண்கிறோம்.
காற்றுவீசு கின்றபோது என்னகாண்கிறோம்?
கவலையின்றிக் கொடைகொடுக்கும் கருணைகாண்கிறோம்.

மலையகத்துக் கடலகத்து என்னகாண்கிறோம்?
மக்களுக்கு நிதிவழங்கும் மனதுகாண்கிறோம்.
சிலைசெதுக்கும் கல்லிடத்து என்னகாண்கிறோம்?
சித்தம்ஒன்றி உபகரிக்கும் செம்மைகாண்கிறோம்.

புல்லிடத்தும் பூவிடத்தும் என்னகாண்கிறோம்?
பொறுமையோடு ஈந்துவக்கும் பெருமைகாண்கிறோம்.
எல்லையற்ற உலகமீதில் என்னகாண்கிறோம்?
ஏழைமக்கள் இரந்துவாடி இறத்தல்காண்கிறோம்.

அதிசயம் இதுதானா?

— ஆசிரியர், வி. பி. மரியாம்பிள்ளை —

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்தச்சுவாமியாரையிட்டுப் பரப்பிய செய்திகளெல்லாம் வெறுங்கட்டுக் கதைகள்; நான் பின்முன்ஆராயாது அவற்றையெல்லாம் நம்பியது என்ன பெரும் மதியீனம்; இனிமேல் இங்கு கணவேளைதானும் தாமதிக்கலாகாதென்று சிந்தித்துக்கொண்டு நிமிர்ந்த தனவந்தர் தமது படுக்கையைநாடிப் பரபரத்துச்சென்றார் அல்லவா? என்றாலும், "இல்லை, இல்லை, இன்னும் ஓர் தரம் பார்ப்போம்" என்று அங்கலாய்த்துக்கொண்டு சென்றவழியே திரும்பினார் சுவாமியார் இருந்த அறையைநோக்கி.

ஆ! என்ன அதிசயம்! மாடிப்படிகளெல்லாம் தகதகென்று திடீரென ஒளிரக்கண்டார். மின்னலெனச் சுடர் ஒன்று கண்ணைப் பொறித்தட்டிக் கொண்டு அசையக்கண்டார். அந்தச் சுடரின்அலை வரும்திசையை உற்று நோக்கினார். சுவாமியார் இருக்கும் கீழ்வீட்டின் பக்கமாய்க் கண்களைத் திருப்பினார். திடுதிடென இறங்கிச் சன்னல்வழியாய்க் கூர்ந்துபார்த்தார். அவரது கண்கள்இரண்டும் கூசின. பளிங்கின்மேல் பகலவன்கதிரொளி பட்டாற்போல், அறைமுழுவதும் இணையில்லா அற்புதஒளி வீசியது. அப்பிரகாசம் அறைச்சுவர்களின் வெளிப்புறத்திலுமே பிரதிபலித்தது. அவற்றையெல்லாம் கவனித்ததனவந்தர் ஆச்சரியவசத்தரானார். பின்னர் கழுத்தை நன்றாகநீட்டிச் சுவாமியார் அமர்ந்திருந்த ஆசனத்தைநோக்கினார். அவர் கண்கள் இரவில்விரியும் பூனைவிழிகள் போலாயின. திறந்தவாயோடு தம்மையே தாங்கிநிற்கப் பலமற்றவராய்ச் சன்னற்தடைகளை ஒருவாறு தடவிப்பிடித்தார். வியப்புடன் இமைகொட்டாது திரும்பவும் எட்டிப்பார்த்தார். புதுமை! புதுமை! எனத் தம்மையறியாமலே கூறிநின்றார்.

சுவாமியார் தமதுகரங்களில் புத்தகத்தை விரித்துவைத்திருந்தார். அதன்மேல் பாலகயேசு நின்றநிலையிலே அவருடன் அளவளாவக்கண்டார். தாயும் பிள்ளையும்போல் மாறிமாறிஇருவரும் கன்னங்களிலே கொஞ்சிக் குலாவுவதைக் கண்ணுற்றார். சுவாமியாரும் ஓர் யோகியைப்போன்று பாலகயேசுவைப் பார்த்தவண்ணம் பரவசமுற்றிருந்தார். ஆனால், திவ்வியபாலனோ அவரைஅரவணைத்தும், இருகரங்களாலும் அவர்கழுத்தை இறுகக் கட்டிப்பிடித்தும் விளையாடுவாரைப்போல் காணப்பட்டார். இவற்றையெல்லாம் கண்ணுற்றதனவந்தர் சிம்மசொற்பனம் கண்டவரைப்போல் தம்மையேமறந்தவராய், "அம்மா" என்று பலமாக அலறினார். அதைக்கேட்ட அவர் வீட்டார் அவ்விடம் விரைந்துசென்றனர். சென்றதும் அவர்மூர்ச்சையுற்றுக் கிடக்கக்கண்டனர். அங்கு வெளிச்சத்தையோ, வேறெதையுமோ அவர்கள் காணவில்லை. வழமை போலவே எங்கும் ஒரேயிருட்டாய் இருக்கக் கண்டதே அவர்களுக்குப் பெரும் பயமுண்டாயிற்று. தனவானைத் தூக்கிச்சென்றனர். படுக்கையிலே வளர்த்தித் தண்ணீர்தெளித்தனர். பருகச் சுடுபானமும் கொடுத்தனர். மூர்ச்சைதெளிந்ததும் தனவந்தர் நடந்தவைகளையெல்லாம் எடுத்துக் கூறினர். உடனே எல்லவரும் அர்ச். அந்தோனியார் இருந்த அறையை நோக்கி விரைந்துசென்றனர். ஆனால், அறை வெறுமையாயிருக்கக்கண்டு மலைத்துநின்றனர்.

தினமும் கோவில்சந்திக்கும் வழக்கம் பலருக்குஉண்டு. பலமுறைகளில் அர்ச். அந்தோனியார் சுரூபத்தின் முன்பாகச் செபித்தும் வருகின்றனர். ஆனால், அச்சுரூபத்தை அவர்கள் நன்கு அவதானிக்கிறார்களோ என்பது சந்தேகம். அவதானித்திருந்தால் அவர் தமதுகரங்களில் ஏந்தியிருக்கும் விரித்தபுத்தகத்தின்மேல் பாலகயேசு அப்படிஏன் அன்புறவாடினார் என்று வினாவியிருப்பர். கரங்களால் கழுத்தை இறுகக் கட்டிப்பிடித்திருப்பது அவரை வருத்தவல்ல; ஆனால், அன்பின்அளவைக் காட்டவேயென்க.

சுபம்!

நன்றி

இம்மாசம் தம் யூபிலித்தினத்தைக் கொண்டாடிக் காத்திராப்பிரகாரமாய் மரணத்திரையில் மறைந்தவவாகிய வண. மேரி ஒவ் ஜீசஸ் தாயார் அவர்களின் பிரேதசேமச்சடங்கில் பங்குபற்றினோர்க்கும், உதவிஅளித்தோர்க்கும், எம்முடன் அனுதாபப்பட்டோர்க்கும், வண. கிளைச்சிரேஷ்டர் தாயாரும், யாழ்ப்பாண மடத்தின் சிரேஷ்டதாயாரும், கன்னியரும் ஆகியநாமெல்லோரும் எம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறோம்.

திருக்குடும்ப கன்னியர்மடம்,
யாழ்ப்பாணம்.

பல்வேறு சிந்தனைகள்

—*—

பரிசுத்தர்களாயிருக்க விரும்புகிறீர்களா? நான் எழுதுவதை வாசியுங்கள், வாசிப்பதோடு நின்றுவிடாமல் செய்யவும் முயலுங்கள். தினமும் ஐந்துநிமிஷங்கள் ஐம்புலன்களை அடக்கி, உலக விஷயங்கள் யாவையும் மறந்து, உங்கள் உள்ளத்தில் இறங்கி இறைவனோடு ஒன்றித்துப்பேசுங்கள். "என்தேவனே, உம்மை ஆராதிக்கிறேன், எனக்கு ஒளியைத் தந்தருளும், எனக்குத் துணையாயிரும், என்னை உறுதிப்படுத்தியருளும், எனக்கு ஆறுதலளித்தருளும். நான் செய்ய வேண்டியது இன்னதென்று தெரிவிப்பீராக. நீர் விரும்புவது எல்லாம் செய்யமனதாயிருக்கிறேன், நீர்எனக்கு அனுப்பச்சித்தமாகும் சிலுவைகளைச் சுமக்கச் சித்தமாயிருக்கிறேன். உமது சித்தத்தை அறிந்து கொள்வதே எனதுபேராவல்.

இங்ஙனம், செய்வீர்களாகில் உங்கள் வாழ்க்கைப்படகு இனிது ஓடிச்செல்லும். துன்பதுயரங்களின் நடுவில் ஆறுதலையடைவீர்கள். துன்பங்கள்எவ்வளவு வருமோ, அவ்வளவிற்குத் தெய்வ அருள் பெறுவீர்கள். அந்த அருள் உங்களுக்குச் சக்தியைத் தரும். தெய்வத் திருச்சித்தத்திற்குப்பணிந்து நடப்பதில் அடங்கியுள்ளது பரிசுத்ததனத்தின் இரகசியம்.

உலகில்நாம் பிறருடையவேலைகளையும், சுகதுக்கங்களையும் பகிர்ந்துகொள்ளவேண்டும். பிறருடையஉதவி நமக்குஅவசியம். பிறருக்கு உதவிபுரிவது நமதுகடமை. இறைவன் நமக்கருளிய கொடைகளைப் பிறர்சேவைக்காகப் பயன்படுத்தவேண்டும். இங்ஙனம் செய்வதால்மாத்திரம் நமது வாழ்வு தெய்வீகத் தன்மை பெறும்.

இன்பம் மூன்றுவிதம்: **சரீர இன்பம்** — உணவு, உடை, சுக போகங்கள்முதலியவை சரீர இன்பத்தைச்சேர்ந்தவை. **மன இன்பம்** — நூல்களைப்படித்துஅறிவை வளர்த்து உண்மையைக்கண்டறிவது. **ஆன்ம இன்பம்**—நேசம், தியாகம், செபம். உயரிய இன்பங்களை அனுபவிக்கக் கீழ்த்தர இன்பங்களைக் கைவிடவேண்டும்.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயஆண்டவர், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். அருளானந்தர், அர்ச். செபஸ்தியார் இவர்களிடம் அடியேன் இரந்து கேட்ட காரியங்கள் அனுகூல மடைந்தமைக்கு அடியேன் இருதயபூர்வமான நன்றி தெரிவிக்கிறேன். அவர்களுடைய பரிசுத்தநாமங்கள் என்றென்றும் புகழப்படுவதாக!

கல்லாறு J. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For Sale

A METZLER PIANO

Over damper full iron frame in good condition and is good for all occasions.

Apply to :—

Lanka Musical Works,
36, Main Street,
Jaffna.

GOVT. TENDERS

Mannar Kachcheri

N 2528—Tenders are invited up to 10 a. m. on 14-9-55. for the re-sale of Foreign Liquor Tavern Rent, Mannar Dist.,—1955/56. For particulars see Part I, Section II, Govt. Gazette, 2-9-55.

விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், குருநகர் விளையாட்டுப்போட்டி சென்ற ஆவணி 27-ம், 28-ம் தேதிகளில் குருநகர்மைதானத்திலே நகரசபைத்தலைவர் காதி எம். எம். சுல்தான் அவர்கள் தலைமையிலும், 2-ம் வட்டாரப்பிரதிநிதி திரு. எம்.எஸ். எவ். சேவியர் அவர்களின் ஆதரவிலும் சிறப்பாக நடைபெற்றது. அவ்வேளை மேயர் அவர்கள் பேசியபோது: இப் போட்டியில் கலந்து கொண்டமை தமக்குச் சந்தோஷமென்றும், இந்த ஸ்போட்ஸ்களைத் தனது 5-வது பிராயத்தைப் பூர்த்திசெய்து ஒற்றுமையை நிலைநாட்டி உடற்பயிற்சியை வளர்த்து வளர்பிறைபோல் வளரவேண்டுமென்றும் கூறினார். பின்னர் வட்டாரப் பிரதிநிதி சிலரன்மதிகள் கூறினார். இப்போட்டியிலே விசேஷப்பட்டது நீர்த்தப்போட்டியாகும். உணர்ச்சியும், உற்சாகமும்கொண்ட 9 இளைஞர்கள் முன்வந்து இதிலே கலந்துகொண்டார்கள். மூன்றுமைல் தூரத்தைப் 16 வயதுள்ள வில்மோறியா ஒருமணிநேரத்தில் நீர்நிறைத்தமை பாராட்டத்தக்கதாகும். இரண்டாவதாகக் கயிற்றான்னபவர் 1மணி 1நிமிஷத்திலும், மூன்றுவதாகச் சவிரியான் என்பவர் 1மணி 3நிமிஷத்திலும் நீந்திமுடித்தனர். சென்றவருடம் இந்த நீர்த்தப் போட்டியிலே முதல்இடம் பெற்றவர் 1மணி 31நிமிஷத்தில் மூன்றுமைல் தூரத்தையும் நீந்திமுடித்தார்.

— நிருபர்

வரவேற்பு உபசாரவிழா

யாழ்ப்பாணப் பட்டினசங்கத்திலும், நகரசபையிலும் முன்னர் ஓர்அங்கத்தவராய் இருந்தவரான திரு. ஜி. ஜே. செபஸ்தியாம்பிள்ளை சேயோன் அவர்கள் ஆசினரால் ஜே. பி. எனப்படும் சமாதானநீதிவான்பட்டம் சம்மானிக்கப் பெற்றதையிட்டு அவரைக்கௌரவிக்குமுகமாக யாழ்ப்பாணநகரமண்டபத்திலே சமீபத்தில்அவருக்கு ஆடம்பரமான ஓர்வரவேற்புஉபசாரம் அளிக்கப்படலாயிற்று. அத்தருணம் அன்பர்களும், அபிமானிகளுமாகப் பெருந்திராளானோர் சமுகங்கொடுத்திருந்தார்கள்.

பின்னர் விழாநாயகர், சனற்றர் கனகநாயகம்அவர்கள்சமேதராய் மயில் வாகனம்போன்று அலங்கரிக்கப் பட்டிருந்த ஓர்மோட்டர்வாகனத்திலே பட்டணப் பெருந்தெருவூடாகவும், இரண்டாம், மூன்றும் வட்டாரங்களினூடாகவும் வாத்தியவரிசைகளுடனும், கோலாட்டம்முதலாம் கொண்டாட்டச் சிறப்புகளுடனும் பாஷையூர் அர்ச். அந்தோனியார்கோவில் மைதானத்துக்குப் பெரும்ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பெற்றதும் வடமாகாணஅதிபர் திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் தலைமையிலே ஓர்பகிரங்கக்கூட்டம் நடந்தேறியது. அதிலே விசித்திரவேலைப்பாடுள்ள அழகியவரவேற்புப் பத்திரம்ஒன்று ஆசிரியர் ஜே. எஸ். அழகையா அவர்களால் படித்துக் கொடுக்கப்பட்டது. சேர்அருணாசலம் மகாதேவா, சேர்பிலிப் ஒற்றிக்கோ முதலாம் பிரபலஸ்தர்களாலே வாழ்த்துச்செய்திகள்பல அனுப்பிவைக்கப்பட்டன. சிறுமிகள்குழுஒன்றின் அலங்காரநடனம் சபையோரைக் குதூகலிக்கச்செய்தது.

வடமாகாணஅதிபர் திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் எழுந்து, திரு. செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் அவ்வட்டாரப் பிரதிநிதியாயிருந்த எட்டுவருடகாலத்திலும் பாஷையூர்மக்களுக்கு ஆற்றிய சேவைகளைக் குறிப்பிட்டு, கற்கருமங்களை நடத்திவைப்பதில் அவர்காண்பித்துவரும் பிரமாணிக்கத்தைப் பாராட்டினர். சுகாதாரம், மின்சாரவெளிச்சம் ஆதியன சம்பந்தமாய்ச் செய்துவைத்துள்ள திருத்தத்துக்கும், எல்லாத்துக்கும்மேலாய்ச் சேர்அருணாசலம் மகாதேவா அவர்கள் அரசாங்கசபையிலே யாழ்ப்பாணப்பிரதிநிதியாய் இருந்தகாலத்தில் ஓர் கடற்தொழில் துறையை அரசாங்கத்தைக்கொண்டு அமைப்பித்துவிட்டதற்குமாகப்பாஷையூர்வட்டாரம் திரு. செபஸ்தியாம் பிள்ளை அவர்களுக்குப் பெரிதுங்கடமைப்பட்டதெனச்சென்றார் எஸ். ஆர். கனகநாயகம்அவர்கள் கூறினார். மூதலியார் சி. முத்துத்தம்பி, திரு. கே. பி. முத்தையா, திரு. ஜே. எஸ். அழகையாஎன்பவர்களும் கூட்டத்தில் பேசினர்கள்.

ஏற்றில் விழாநாயகர் அனைவர்க்கும் நன்றிதெரிவித்தார். திரு. டி. அந்தோனிப்பிள்ளை கூறியநன்றியுரையுடனும், வாணவேடிக்கையுடனும் வரவேற்பு உபசாரம் இனிதேநிறைவாயிற்று.

— நிருபர்.

5-வது ஆண்டு நிறைவுவிழா

சில்லாலைவடக்கு, கல்லாயன் சனசமூகநிலையம், இளைஞர்சங்கம் இவற்றின் ஐந்தாவதுஆண்டு நிறைவுவிழாவும், சில்லாலைவடக்கு ஐக்கியகாணயசங்கவருடாந்த பரிசளிப்புவிழாவும் சென்ற 16-8-55 செவ்வாய்க் கிழமை நடைபெற்றன. அன்றுகாலை நிலையமண்டபத்திலே நிலையக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. பின்னர் சங்காணைக்கோவிற் பற்றுச் சுகாதாரபரிசோதகர் வீடுகள் தோறுஞ்சென்று அவற்றின் சுகாதாரத்தைக் கவனித்துச் சுகாதாரவிதிப்படி அமைக்கப்பெற்ற முதற்தரமான மூன்றுவீடுகளுக்குப் பரிசில்கள்வழங்கச் சிபாரிசுசெய்தார். அதன்மேல் நடைபெற்ற விவசாயப்போட்டியில் யாழ்ப்பாண மேல்பாகக் கூட்டுறவுப் பகுதிஅதிபர் சிபாரிசுசெய்தவர்களுக்குப் பரிசில்கள்வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. உருமத்தின்போது வாசிகசாலைக் கிரமப்போட்டிகளும், பிற்பகல் 5மணிக்கு மாதகல் அர்ச். சூசையப்பர் ஆங்கிலபாடசாலை அதிபர் திரு. ரீ. ஜேம்ஸ்அவர்கள் தலைமையில் விழாப்பகிரங்கக்கூட்டம் நடந்தேறியது. திரு. ரீ. ஆசீர்வாதம் அவர்கள் வரவேற்புரைகூறினர். போட்டிகளில் வெற்றிபெற்றவர்கட்கு யாழ்ப்பாணமேல்பாகக் கூட்டுறவுஅதிகாரி திரு. வி. நடராசாஅவர்கள் பரிசில்கள்வழங்கினர். அவ்வேளைவடபகுதித் தலதாபனஉதவிஅதிபர், வடபகுதித் தலதாபனஅதிபர், கேற்முதலியார் திரு. நியாகராசா, யாழ்ப்பாண மேல்பாகக் கூட்டுறவுஅதிகாரி, யாழ்ப்பாணப் ப. ச. ச. நி. சமாசத்தலைவர், முதலியார் திரு. வி. மகேசன் ஜே. பி., யாழ்ப்பாணக் கி. ச. சமாசத்தலைவர், திரு. எஸ். கந்தையா, ஜே. பி. பண்டத்தெருப்பு வி. வி. ஐ. சங்கத்தலைவர் ஆகியோர் பேசினார்கள். காரியதரிசியின் அறிக்கை ஆசிரியர் என். அந்தோனிப்பிள்ளை அவர்களால் படிக்கப்பட்டது. காரியதரிசி எம். ஞானப்பிரகாசம்அவர்கள் நன்றியுரைகூறியதும் தேசியகீதத்துடன் விழா முடிவெய்தியது.

— நிருபர்

ஆக்கத்துக்கு அணுசக்தி

வல்லரசுகளின் யுத்தகர்ச்சனை அடங்கிவருகிறது. கிழக்குலகமும், மேற்குலகமும் சந்தித்துச் சுமுகமாக வாழ்வதற்கான சௌசன்யசூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. ஆயுதபலத்தால் அகிலஉலக சமாதானத்தை நிலைநாட்டலாம் என்ற அர்த்தமற்ற நம்பிக்கையில் மண்விழுந்தது. பரஸ்பர சம்பாஷணைகளால் உலகில் நிரந்தரஅமைதியை நிலைநாட்டலாம்என்ற அபிப்பிராயம் வலுப்பெறுகிறது. அணுஆயுத பூத வளர்ச்சியும், அதற்கேற்றாற்போல வல்லரசுகளின் போக்கும் உலகைப் பஸ்மீகரமாக்கி விடுமென்றஅச்சம் இருந்து வந்தது. அந்த அச்சம் மடிந்தது. அழிவுக்கு அணுசக்திஎன்ற தீர்மானத்தை வல்லரசுகள் கைகெகிழ்ந்தன. ஆக்கவேலைகளுக்கே அதை உபயோகிப்பதென்ற முடிவுக்கு வந்திருக்கின்றன. ஜெனிவாநகரிலே கடந்தவாரத்தில் ஆக்கத்துக்கு அணுசக்தியை உபயோகிப்பதுபற்றி விஞ்ஞானிகள் மகாநாடுநடத்தி முடித்தார்கள். அந்தமகாநாட்டில் பென்னம்பெரிய பகையரசுகாடுகள் சிரித்துப்பேசின. பாஸ்பரம் அணுஇரகசியங்கள் சிலவற்றைத் தங்களுள் பரிமாறிக்கொண்டன. மகாநாடு வெற்றிகரமாக முடிந்தபிறகு அமெரிக்க ஜனதிபதி ஐஸன்ஹாவர் ஒருநல்லயோசனை கூறினர். அணுச்சக்தி விஞ்ஞானிகளின் மற்றொருமகாநாட்டை மீண்டும் நடத்தவேண்டுமென்றார். எல்லாநாடுகளும் இந்தயோசனையை வரவேற்கின்றன. நடந்துமுடிந்த விஞ்ஞானிகள் மகாநாட்டின் வெற்றியை இந்தவாரவேற்புப் பிரதிபலிக்கிறது. யுத்தஅபாயத்தைக் குறைக்க இந்தமகாநாடு உதவியிருக்கிறது. இதில் ஐயமில்லை. இன்னொருமகாநாடு நடப்பதும் நல்லதே. அதனால் அபாயம் மேன்மேலும்குறையும். விஞ்ஞானஇரகசியங்களை வல்லரசுகள் இன்னும்அதிகம் பகிர்ந்துகொள்ள மற்றொருமகாநாடு உதவுவதாகும். அதன்மூலம் சமாதானத்துக்கு எவ்வளவோ சாத்தியக்கூறுகள் ஏற்படும். பகையரசுகளின் விஞ்ஞானிகள் ஒருவரையொருவர் கண்டு பேசிவிட்டார்கள். ஜெனிவா மகாநாட்டினால் விளைந்தபலன் இதவாகும். இந்தப் பலன் நீடிக்கவேண்டுமானால், விஞ்ஞானிகளிடையே ஏற்பட்டுள்ள தொடர்புகள் முறியக்கூடாது. இந்தவகையிலே ஐஸன்ஹாவரின்யோசனை மிகவும் வரவேற்கத்தக்கதே. உலகஅமைதிக்குப் பங்கம்விளைக்கக்கூடிய பெரியவல்லரசுகள் தணிந்துபோய் விட்டனதான். ஆனால், அதற்கு ஈடுசெய்யப்போலும் சிறியநாடுகள் கொந்தளிப்புகளை வளர்க்கின்றன. யுத்தங்களுக்குத் தூபம் போடுகின்றன. உலகின பல பாகங்களிலும் இந்நாட்களிலே பயங்கர இரத்தக்களரிகள் பிறந்துள்ளன. மொரொக்கோவிலும், அல்ஜீரியாவிலும் சுதேசமக்கள் கிளர்ச்சிசெய்து போரிடுகின்றார்கள். சூடானிலே உயிர்ச்சேதம் விளைக்கும் கலகங்கள் நடக்கின்றன. சிங்கப்பூரிலும் அமைதி குழம்பியிருக்கிறது. கோவாவில் போர்த்துக்கேய வெறியாட்டம் இன்னுமேவிட்டுக்கொடுத்தபாடில்லை. அணுஆயுத யுத்தஅபாயம் ஒருபுறம்குறைய மறுபுறம் ஆங்காங்கே உள்நாட்டுக் கலகங்களும், யுத்தங்களும் சமாதானத்துக்குப் பங்கஞ்செய்கின்றன.

எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

		ரூ.	ச.
சின்னக் குறிப்பிடம்	...	30	
பெரிய குறிப்பிடம்	...	50	
மெய்விவாகக் குறிப்பிடம்	...	05	
உறுதிப்பூசுதற் குறிப்பிடம்		அச்சில்	
சத்தியவேத தர்ப்பணம் போதகாகண்டம் (Part I)	...	2	50
எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது.			
ஓளஸ் பேப்பர்	...	5	00
பைபிள் ,,	...	5	75
,, அடையாளமுள்ளது	...	6	00
மோக்ஷபாதை (கலிக்கோ)	...	5	00
,, (தோல்)	...	7	50
முத்தித்திறவுகோல் (கலிக்கோ)	...	2	50
,, (தோல்)	...	3	50
செபச்சண்டி	...		75
பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள்	...	2	00
திவ்விய பூசையின் சாதாரண செபங்கள்	...		40
நித்திய ஆராதனை	...		25
ஓரா ஆராதனை	...		25
திருமணித்தியாலம்	...		40
திவ்வியபூசை மகத்துவம்	...	2	50
பூசை உதவி மந்திரம்	...		40
பூசை உதவி மந்திரம் (மட்டை)	...		15
வேதாகமவாசிப்பு	...		90
சற்பிரசாத அன்பன்	...		20
யேசுகாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை	...	2	90
பசாம் ...	...	1	50
சிலுவைப் பாதை	...		25
மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள்	...	1	00
சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்)	...	6	50
(பசாமில்லாமல்)	...	5	00
கத்தோலிக்கு கீர்த்தனமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்)	...		75
தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்)	...		75
இரண்டும்சேர்த்துக்கட்டியது (நோட்டில்லாமல்)	...	1	50
லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்)	...	2	25
தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்)	...	2	25
தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்)	...	4	75
கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி	...		75
ஆண்டவர் சரித்திரம் (Part I)	...		90
,, (Part II)	...		90
,, (Part III)			90
திருஇருதய வணக்கமாதம்	...	1	50
தேவமாதாவின் வணக்கமாதம்	...	1	50
மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம்	...	1	50
அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா)	...	2	50
கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும்	...	1	50
நவதின உற்சவம்	...		75
தரும அப்பம்	...	1	00
பத்திச் சபைகள்	...		20
ஆத்ம தரிசனம்	...		20
தமிழரின் பூர்வசரித்திரம்	...		50
ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம்	...		35
அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம்	...		40
இலகும் மகிமைமுடி	...		30
ஆத்மாக்களின் அழுகைக்குரல்	..	1	50
ஞானவொடுக்கப் பிரசங்கம்	...	1	50
புதியஏற்பாட்டின் திருப்பலி	...		25
Oremus Book	...	1	25

- தபாற்செலவு பிரத்தியேகம்.
- புஸ்தகப் பெறுமதியின் அரை வாசிப்பணம்அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

கிடைக்குமிடம் :—

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 1-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org